தி. மு. க.

# வெற்றிமுரசு

அறிஞர் C. N. அண்ணாதுரை
இயக்க முன்னணி வீரர்கள்

கலைமன்றம்
சென்னை-1

வெளியீடு: 85

முதற் பதிப்பு: ஜூலை 1953

உரிமை உடையது.

விலை ரூ. 1—0—0

விற்பனை நிலையம்:

எம். எஸ். ராமுலு கம்பெனி

286, சைனா பஜார்

சென்னை-1

# உ ரி மை உ ரை

ஏ. வா. பா. துரைசாமி.

செயலாளர்,

இராமநாதபுர மாவட்ட தி.மு.க. மாநாடு

மருதுநகர். 7.7.53

மருதுநகரில் நடந்த பேரவை மாநாட்டின் 27, 28-6-53 தி நிகழ்ச்சிகளைப் புத்தகமாக வெளியிட — சென்னை, தமிழ்மன்றத்தாருக்கு இதன் மூலம் உரிமை அளிக்கிறேன்.

துரைசாமி.

செயலாளர்.

# இங்கர்சால் எழுதிய

## இணையற்ற நூல்கள்

●

| | | | |
|---|---|---|---|
| வால்டையர் | .... | 1 | 0 |
| மூடநம்பிக்கை | .... | 1 | 0 |
| மதங்கள் | .... | 1 | 0 |
| அறியாமை | .... | 1 | 0 |
| உண்மை | .... | 1 | 0 |
| கோயில்கள் | .... | 1 | 0 |
| கடவுள் | .... | 1 | 0 |
| மக்கள் உரிமை | .... | 1 | 0 |
| இங்கர்சால் அறிவுரைகள் | .... | 0 | 8 |

கலைமன்றம்

சென்னை-1.

# பயனடையுங்கள்

★

இராமநாதபுரம் திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநாடு விருதையில் நடைபெற்ற போது, சென்னை கலைமன்றத்தினர், மாநாட்டு நிகழ்ச்சிகளை நூல் வடிவமாக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டனர். மாநாட்டு நிகழ்ச்சிகளும், தலைவர்கள், சொற்பொழிவாளர்கள் பேச்சுகளும் நூல் வடிவில் உருவாகி திராவிடத்தில் நடமாடுவது நல்லதுதான் என்று கருதி என் நண்பர்களுடன் கலந்தாலோசித்து அதனை வெளியிட்டுக் கொள்ளும் உரிமையை கலைமன்றத்தினருக்கு அளித்தேன்.

அந்த உரிமையின் விளைவு முதல் நாள் நிகழ்ச்சிகள் ஒரு புத்தகமாகவும், அடுத்த நாள் நிகழ்ச்சிகள் ஒரு புத்தகமாகவும் ஆக இரு புத்தகங்கள் உருவாயின. அந்த இரு நூல்களும் தென்னாட்டில், இன்பத் திராவிடத்தில் வீடுதோறும் இருக்க வேண்டும். ஆகவே இந்த நல்ல நூல்களை திராவிடர்கள் வாங்கிப் படித்து நல்ல பயனை அடைய வேண்டும் என்பதே எனது ஆசை!

முதல் நாள் நிகழ்ச்சி "பெண்கள் முன்னேற்றம்" என்றபெயருடன் வெளிவருகிறது. திராவிடத் தாய்மார்களின் முற்போக்கு நூல் இது. இதனை தாய்மார்கள் பெரிதும் பயன் படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி "வெற்றிமுரசு" என்ற பெயருடன் வெளிவருகிறது. இதில் அறிஞர் அண்ணா கழகத் தோழர்கள், முழங்கிய வெற்றி முழக்கம் முதலியவைகள் இடம் பெறுகின்றன. திராவிடர்களின் அறிவுக் களஞ்சியமாகிய இந்த நூல்களை திராவிடம் ஏற்று போற்ற வேண்டும். இதனை வெளியிட முன்வந்த கலைமன்றத்தினருக்கு என் நன்றி!

வணக்கம்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

விருதுநகர்.

# அன்புக் கரம் நீட்டுங்கள்!

தென்னாட்டில் மக்களுக்காகப் பாடு படும் ஒரே ஓர் இயக்கம் திராவிடர் இயக்கம். இந்த இயக்கத்தின் உயிர் நாடியாக விளங்குவது திராவிடர் முன்னேற்றக் கழகம். அந்த கழகத்தின் அறிஞர்கள் பேச்சுக்களைக் கேட்கவும், அவர்கள் தீட்டிய நூல்களைப் படிக்கவும் திராவிடம் ஆர்வத்துடன் முன் வருகிறது. ஆகவே திராவிடர்களின் பயன் கருதி இராமநாதபுர மாவட்ட தி. மு. கழக மாநாட்டின் நிகழ்ச்சிகளை நூல் வடிவமாக்க அம் மாநாட்டின் செயலாளர் தோழர் ஆசைத்தம்பி அவர்களை அணுகி அனுமதி கேட்டோம். மறுக்க வில்லை; அளித்தார். அவருக்கு எங்கள் மனம் கனிந்த நன்றி!

இந்தப் பயனுள்ள நூலை எப்போதும் போல் திராவிட மக்கள் முன் நீட்டுகிறோம் அன்புக் கரம் நீட்டி பெற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருப்பதால்!

வணக்கம்

கலைமன்றத்தினர்

# அறிஞர் அண்ணாவின்

## அரிய நூல்கள்

| | | |
|---|---|---|
| தீ பரவட்டும் | .... | 1 0 |
| தேன் துளிகள் | .... | 1 0 |
| புராண மதங்கள் | .... | 1 0 |
| மறு மலர்ச்சி | ... | 1 0 |
| குமாஸ்தாவின் பெண் | .... | 1 0 |
| அறிஞர் அண்ணாதுரை (தொகுப்பு) | | 1 0 |
| இதன் விலை ரூபாய் 3,000 | .... | 0 12 |
| தேவ லீலைகள் | .... | 0 8 |
| நமது முழக்கம் | .... | 0 8 |
| அண்ணாவின் உவமைகள் | .... | 0 8 |
| வெற்றிமுரசு | .... | 1 0 |

கலைமன்றம்

சென்னை - 1.

# வெற்றி முரசு

[ அறிஞர் - அண்ணாதுரை ]

—o—

அன்புள்ள தலைவர் அவர்களே!

தோழர்களே!! தாய்மார்களே!!!

இரண்டு நாட்களாக விருதுநகரில் நடைபெற்ற மாநாடுகளைக் கண்டு களித்தீர்கள்.

முதல்நாள் நடைபெற்ற பெண்கள் முன்னேற்ற மாநாட்டிற்கு நான் வர இயலாமற் போய்விட்டது — வருந்துகிறேன் — தாய்மார்கள் பொறுத்திடக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் வராதது பற்றி ஒருவகையில் வருத்தப்பட்டாலும், மற்றொரு வகையில் மிகவும் பொருத்தமானதென்றும் கருதுகிறேன். ஆடவரின் கொடும் செயல்களைத் தங்கு தடையின்றி அலசி எடுத்துப் பேச நல்லதொரு வாய்ப்பாக அமைந்து விட்டதென்றே கருதுகிறேன்.

பெண்கள் மாநாட்டிற்கு நான் வரவில்லையே தவிர, மாநாட்டு நிகழ்ச்சிகளை நன்கு விசாரித்தறிந்திருக்கிறேன். இங்கு மாநாடு நடந்த அதே நேரத்தில் சென்னையில், நம்நாடு பத்திரிகையில் வெளியிடுவதற்காக பெண்கள் மாநாட்டுத் தலைவி தோழியர் அருண்மொழி அவர்களின் தலைமையுரையையும், வரவேற்புத்

தலைவி தோழியர் உ. இராஜாம்பாள் அவர்களின் வர வேற்புரையையும் படித்துக்கொண் டிருந்தேன்.

உரைகளைப் படித்துப் பார்த்தேன்; மகிழ்ந்தேன் - எவ்வளவு ஆர்வம் ததும்புகிறது, வீர உணர்ச்சி எழு கிறது, தாய்மார்களின் உள்ளங்களிலே என்பதை அந்த உரைகளிலே கிடைக்கப் பெற்று பெருமகிழ்ச்சி யடைந் தேன்.

தாய்மார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எப்போதுமே துணை நின்று பெரும் பணியாற்றி வந் திருக்கிறார்கள்—பிரச்சாரப் பணி மட்டுமல்ல—தி.மு.க. எடுத்துக் கொண்ட எல்லா நேரடி நடவடிக்கைத் திட் டங்களிலும் ஈடுபட்டு, தீரமாகப் பாடுபட்டு வந்திருக்கிறார் கள். சர்க்காரின் அடக்கு முறைத் தாக்குதல்களை ஏற் றுக்கொண் டிருக்கிறார்கள், தடியடி தர்பார்களைத் தாங்கி யிருக்கின்றனர்!

வீரத் திராவிடத் தாய்க்குலம் வேறெப்படி இருக்க முடியும்! அவர்கள் உரம் ஊட்டி, இனத்தை வளர்ப்ப வர்கள்! வாழ்க தாய்க்குலம்! வளர்க அவர் தம் வீரம்! என்று போற்றாதிருக்க முடியாது!

திராவிட நாடு தனியரசு ஆனால்தான் பெண் ணடிமை ஒழியும் என்ற உண்மையை எடுத்துக் காட்டி, வரவேற்புரையில் தோழியர் உ. இராஜாம்பாள் அவர் கள் திராவிடம் அமைத்திடத் தாய்மார்கள், தீவிரமாகப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண் டிருக்கிறார் கள்.

ஆர்வம் எந்த வகையிலே மலர்கிறது என்பதும், அம்மையாரின் உரையிலே காணக்கிடக்கிறது.

பொதுத் தேர்தலிலே ஈடுபட்டு, மக்களிடம் ஓட்டுகளைப் பெருவாரியாகப் பெற்று, சட்ட சபைகளைக் கைப்பற்றி, திராவிடத் தனியரசு பிரகடனத்தை வெளியிட வேண்டும் என்று அம்மையார் கூறி யிருக்கிறார்கள்.

எழுச்சி யூட்டும் கருத்து இது! திராவிட முன்னேற்றக் கழகம், இதுபற்றி, முறைப்படி எண்ணிப் பார்த்து, தக்க திட்டத்தைத் தீட்ட முன்வரும் என்று உறுதியாகக் கூறுவேன்.

அரும் பெரும் காரியங்களைப் பெண்கள் செய்ய இயலும் என்பதை எடுத்து விளக்க, தலைமையுரையிலே, அரிய வரலாற்று உண்மைகள் எடுத்து விளக்கப்பட்டுள்ளன!

இயக்கத் தோழர்களின் இல்லங்களிலே உள்ள தாய்மார்களை யெல்லாம், பெண்கள் மாநாட்டிற்கு வந்து கலந்து கொள்ளும்படி செய்யும் பொறுப்பையும், மாநாடு நடத்துபவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நேற்றையத் தினம், தாய்மார்கள், ஆடவர்கள் தங்கள், குடும்பப் பெண்களை மாநாட்டிற்கு அனுப்பாதது பற்றியும், அழைத்து வராதது பற்றியும் ஆயாசப்பட்டதாகக் கேள்விப்பட்டேன்.

மனைவியை இயக்க காரியங்களிலே பங்கு கொள்ளும்படித் தூண்டும் செயலில் பெரும்பாலான கணவர்களால் வெற்றிபெற முடிவதில்லை.

'நீங்கள் அலைவது போதாதோ, நானும் குழந்தைகளும் வேறு அலைய வேண்டுமா,' என்ற முறைகளிலே கேள்விகள் பறக்கும்.

நாங்கள் சொல்லுவதற்குப் பதிலாக, மாநாட்டிலே கலந்து கொண்ட தோழியர்கள் சத்தியவாணிமுத்து போன்றவர்கள் அவர்களிடம் வந்து பேசி, தைரியம் சொல்லி விளக்கி, "ராணி, புறப்படு, வா, மாநாட்டிற்கு," என்று அழைத்தால் காரியம் சுலபமாக முடியும் — ராணி, ராணி என்று நான் சொல்வது, ஊரை ஆளும் ராணியை அல்ல, என் உள்ளத்து ராணியை — துணைவியைக் குறிப்பிடுகிறேன்.

இதுபோல அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன், வேண்டுகிறேன்.

பெண்கள் மாநாடு மூலம் கிடைத்துள்ள பேரார்வம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெரிதும் பயன்படும்—சந்தேகமில்லை.

இரண்டாம் நாளான இன்றைய அரசியல் மாநாட்டிலே, காலை முதல் மாலை வரை, தலைவர், திறப்பாளர், சொற்பொழிவாளர்கள் உரைகளைக் கேட்டீர்கள் — கருத்துக்கு விருந்தாக அமைந்திருந்தன, அறிவுச்சொற்பொழிவுகள்!

திறப்புரை ஆற்றிய நண்பரின் பல யோசனைகள் சீரிய கருத்தமைந்தன — எனினும் அவர் கூறியபடி, அவைகளில் பல, பொதுக் குழுவிலே நாம் கலந்து பேசப்படவேண்டியன வாகும்.

பொதுவாக, கழக கட்டுப்பாட்டிற்காக நான் சற்று கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று நண்பர் வலியுறுத்தினர் — கண்டிப்பாக இருப்பது என்றால், அந்த நண்பரின் பேச்சிலேயே பாதிக்குமேல் நான் தடுத்திருக்க வேண்டும்.

எனினும், நான் ஜனநாயகத்திலேயும், தோழமையிலேயும் நம்பிக்கையுள்ளவனுகையால், தோழர்களிடம் கருத்தலைகள் கிளம்புவது கண்டு மகிழ்கிறேன்.

கட்டுப்பாடு, கண்டிப்பு என்ற பெயரால் இயக்கத்தின் கருத்து வளர்ச்சியிலே குந்தகம் ஏற்படச் செய்யக் கூடாது.

யாருடைய கருத்தலைகளாக இருப்பினும் கழகத்தின் வளர்ச்சிக்கு உகந்ததாக அதனை எடுத்தாள முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

எனவேதான் எந்தப் பிரச்சினையிலும், கழகத் தோழர்களின் கருத்துக்களை அறிவதில் நான் மிகவும் ஆவல் கொண்டவனுக இருக்கிறேன்.

கருத்தலைகள் கிளம்பட்டும், எங்கும் பாயட்டும், இதனுல் அறிவுப் பயிர் செழித்து வளரட்டும். இடையிலே களை தோன்றினுல் எடுத்து விடலாம், ஆடு மாடுகள் பயிரை அழிக்க முயன்ருல் தடுத்து நிறுத்திவிடலாம், வேலியிடலாம் என்றுதான் கூறுகிறேன்.

சிலருக்குப் பயிரே களையாகத் தோன்றும், வேறு சிலருக்கு களையேகூட பயிராகத் தோன்றக்கூடும். எது எப்படியிருப்பினும், களை எடுக்கிறேன் என்று கூறிக்கொண்டு, வளரும் பயிரையும் பாழ்படுத்தக் கூடாது—அதே நேரத்தில் பயிர் பாழாகும்படி களை வளரவும் விடக்கூடாது. களை தோன்றும்போது களை எது என்று அறிந்து களைந்து எடுத்துவிட வேண்டும்.

இந்த உழவு முறை, அரசியல் பண்ணைக்கும் பொருந்தும்.

கண்டிப்பு, கட்டுப்பாடு, தேவை, களை எடுத்தல் போல; அதே போது பயிர் அழியக்கூடாது—கருத்துக்கு விலங்கிடக் கூடாது; கருத்து வளர்ச்சிக்கு தடை விதிக்கக்கூடாது. இதுதான் நான் கையாளும் உழவு முறை, இயக்கத்திலே!

மக்கள் பெரும் அளவில் இங்கே கூடியிருக்கிறார்கள்—தாய்மார்கள் ஏராளம். இங்கு ஏற்படும் பேச்சொலி, அமைதியைக் குலைக்கிறது என, என் நண்பர் யாவரும் கடிந்துரைத்தார்கள்—மாநாடுகளில் எப்படியெப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று எடுத்துரைத்தார்கள்.

அந்த 'உபதேசக் காண்டம்' நடை பெற்றுக் கொண்டிருந்தபோது, நான் பொதுவாகவே, பெருங் கூட்டம் கூடும்போது, ஏன் அமைதிக் குறைவு காணப்படுகிறது என்பது பற்றி எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

மாநாடுகளில் கூடிடும், பெரும் கூட்டத்தில், ஒரு பகுதிதான் கழக உறுப்பினர்கள், மற்றோர் பகுதி கழக ஆதரவாளர்கள்.

மாநாடுகளிலே கூடிடும் கூட்டம், அத்தனையும் கழக உறுப்பினர்களல்ல; அத்தனையும் கழக உறுப்பினர்களாகவே இருந்தால், அமைதி நிச்சயம் நிலவும்; ஆர்வமும் கட்டுக்கடங்கியதாக இருக்கும், பொதுக்குழு கூட்டங்களில் உள்ளதுபோல.

மாநாடுகளில் வந்து கூடுவோரில், கழக உறுப்பினர் ஒருபகுதி போக, மற்ற பெரும்பகுதி கழக ஆதரவாளர்கள்.

இதிலே, சிலர் மாநாட்டில் என்னதான் பேசுகிறார்கள் கேட்டுப்போகலாம் என்ற அலட்சிய மனப்பான்மையோடு வந்தவர்களாக இருப்பர்.

வேறு சிலர் காங்கிரஸ்காரர்களாக இருக்கலாம்; மற்றும் சிலர் கம்யூனிஸ்டுகளாக இருக்கலாம்; ஒருசிலர் நம்மையும் நமது கட்சிக் கூட்டத்தையும் முதல் முறையாகக் காண்பவர்களாகவும், கேட்பவர்களாகவுங்கூட இருக்கக்கூடும். இதனால்தான் மாநாட்டுப் பெருங் கூட்டத்திலே சுலபத்தில் அமைதியின்மை, சிறுசிறு சந்தடிகள் ஏற்படுகின்றனவேயன்றி வேறல்ல!

இங்கு கூடியுள்ள தாய்மார்கள், தமது செல்வக் குழந்தைகளுடன் வந்துள்ளனர். வள்ளுவர் சொன்னாரே, 'குழலினிது, யாழினிது என்பர், மதலைகளின் மழலைமொழி கேளாதவர்' என்று. அந்த மழலை மொழிகள் அதிகமாகக் கேட்கின்றன. அமைதியின்மைக்கு காரணம் இதுவும் ஒன்றாகும்.

வரவர தாய்மார்களும் தங்கள் மழலைமொழிக் குழந்தைகளைக் கொஞ்சி, சீராட்டி, பாராட்டி, 'கண்ணே, மணியே, கற்கண்டே, கொஞ்சியது போதும். இங்கே நடப்பது நமது மாநாடு, கொஞ்சம் சும்மா இரு, கேள்' என்று கூறித் தமது குழந்தைகளை முத்தமிட்டுச் சாந்தப்படுத்தி விடுவர்; குழந்தைகளும் பழகிக்கொள்ளும் காலப்போக்கில், சத்தமிடாதிருக்க!

நேற்றைய பெண்கள் மாநாட்டு வரவேற்புத் தலைவி தோழியர் உ.இராஜாம்பாள் அவர்கள் தமது வரவேற்பு உரையில், 'இம்மாநாட்டிற்கு வந்திருக்கும் தாய்மார்கள் அனைவருமே திராவிட முன்னேற்றக் கழக உறுப்

பினர்கள் அல்ல" என்று குறிப்பிட்டு, அனைவரையும் அங்கத்தினராகச் சேர வாரீர் என்று அழைப்பு விடுத்துள்ளார்கள்.

அதன்படி, இங்கு கூடியுள்ள பெரும் கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அங்கத்தினரல்லாத, ஆதரவாளர்கள், பார்வையாளர்கள் ஆகியோரை அணுகி கழக உறுப்பினராகும்படி கேட்டுக் கொள்ளவேண்டும். இந்தக் காட்சிதரும் பாடம் அதுதான்.

மாநாடுகளிலே, நாம் நமது கழகத்தின் திட்டங்களை விளக்கி, விவாதித்து நல்ல முடிவுகளைக் காண்கிறோம். மக்களிடையே நம்மைப்பற்றிய தெளிவான விளக்கத்தை எடுத்துக்காட்டி, நம்முடைய வேலை முறைகளை எடுத்துக் காட்டுகிறோம். நல்ல கருத்துரைகள் மாநாடுகளிலே கேட்க முடியும்.

இத்தகைய மாநாடுகள் நடப்பதன் மூலம் மாநாடு முடிந்ததும், அந்தந்த மாவட்டங்களிலே, நம்மைப் பற்றிய விளக்கங்கள் மக்களிடையே நடைபெற்றதன் விளைவாக மேலும் புதிதாக ஒரு ஆயிரம் உறுப்பினர்களையாவது சேர்க்கவேண்டும்.

அப்போதுதான் மாநாடு நடந்ததின் உண்மையான பலன் கிடைத்ததாக எண்ணிப் பூரிப்படைய முடியும். இத்தகைய ஆக்க வேலைகளில் மாநாடு கூட்டுவோர் முயன்று நல்லதொரு பயன்காண வேண்டுகிறேன்.

ஒருசிலர் பேசுகின்றனர் — இப்போது—புதிதாக பெருங்கூட்டம் கூடிப் பயனில்லை, என்று!

பெருங் கூட்டம் கூடுவது, கூடிடும் நிலை சாமான்ய மானதா? அல்ல, சாமான்யமல்ல!

பெருங் கூட்டம் கூடும் நிலை, ஒரு அரசியல் கட்சிக்கு, வளர்ச்சிக்கு வழி, வெற்றிப் பாதையிலே ஒரு கட்டம்.

ஆனால் பெருங்கூட்டம் கூட்டுவதையே ஒரு கட்சி, தன் இலட்சியப் பூர்த்தியாகக் கொள்வது தவறு.

பெருங்கூட்டம் கூடுவது, சேருவது, பயனற்றது, பொருளற்றது என்றோ; பிரமாதமல்ல என்பதோ சரியான பேச்சாகாது!

எனக்குத் தெரியும் எத்தனை யெத்தனை அரசியல் கட்சிகள், இந்தக் காட்சியைத் தத்தமது கட்சிக் கூட்டங்களிலே, மாநாடுகளிலே காணத் தவங் கிடக்கின்றன, என்று.

எத்தனையோ கட்சிகள் இதுபோன்ற காட்சியைத் தங்களிடையே காணமுடியாத காரணத்தால், அங்கலாய்த்துக் கொள்கின்றன, கைபிசைந்து கண்ணீர் விடுகின்றன என்பதும் எனக்குத் தெரியும்.

எனவே, இங்கு நான் காணும் காட்சி—கொட்டகை நிரம்பியுள்ள மக்கள் கூட்டம்—திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றிகளில் ஒன்று; மேலும் பெற வேண்டிய வெற்றிகளுக்கு வாய்ப்பளிக்க வல்லது.

ஒரு கட்சி வளர்ச்சியடைந்துள்ளது, வளர்ச்சியடைந்தது என்பதைக் காட்டுவதற்காகத்தான் மாநாடுகள் கூட்டப்படுகின்றன! அதிலே கூடும் மக்கள் தொகையைக் கண்டு தங்களது கொள்கைகளைக் கேட்க,

கவனிக்கக்கூடும் மக்கள் தொகையைக் காணவேண்டும் என்பதும் மாநாட்டின் நோக்கங்களிலே ஒன்றாகும்.

கலியாண வீடுகளிலே நாதசுரம் போன்ற வாத்தியங்கள் வாசித்து கலியாண வீடு என்று தெரிவிப்பது போல, கட்சியின் வளர்ச்சியைக் குறிக்க, தெரிவிக்க நம் மாநாடுகள், அவற்றிலே கூடிடும் பெருங்கூட்டம் பயன்படுகிறது.

வேறு எப்படித்தான் கட்சியின் வளர்ச்சியைக் காண்பது, காண்பிப்பது? மாநாடுகளைக் கூட்டி வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்து, இனி, அடுத்தக் கட்டம் என்ன என்று கேட்டு அதற்கான வழி வகைகளை ஆய்ந்து, அலசி மேற்கொண்டு முன்னேறிச் செல்வதுதான் நமது நோக்கமாகும்.

பொட்டல் வெளியிலும், வேகாத வெயிலிலும், சிறு கூட்டங்களுக்கிடையேயும் நாம் ஒரு காலத்தில் உலவி வந்ததை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

ஏன்? பதினைந்து, இருபது ஆண்டுகட்கு முன்னர், தென்னிந்திய நல உரிமைச் சங்க (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடுகள் எப்படி நடந்தன? எண்ணிப் பாருங்கள்.

ஐம்பது மோட்டார்கள், அலங்காரமாக வந்துநிற்க, அவைகளிலிருந்து ஐம்பது சீமான்களும், மோட்டார் ஓட்டிகளும் இறங்கி, மாநாடு நடக்கும் மண்டபத்திற்குள்ளோ, அல்லது ஓட்டலுக்குள்ளோ நுழைவர். மோட்டார் ஓட்டிகளே பேச்சைக் கேட்பர், கட்சி ஆர்வம் கொள்வர்.

அந்த நிலை மாறி, பெரியாரின் பெரும் பணியினால், ஜஸ்டிஸ் மாநாடுகளுக்குப் பெருங் கூட்டம் வரத் தொடங்கியது.

அதே முறையில்தான், இப்போது பொது மக்கள் ஏராளமாக, பெரும் அளவில் திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளுக்கு வருகிறார்கள், மலர்ந்த முகங்களோடு.

இது வெற்றியிலே ஒன்று என்பதை உணராது—உணர மறுத்து—பொறாமை பொச்சரிப்பின் காரணமாக, இதிலே என்ன பிரமாதம் இருக்கிறது—கூட்டம் கூடினால் போதுமா என்று கேட்பது, பேசுவது வீணுரை!

நமது நண்பர்கள், கட்சித் தோழர்களுடைய கவலையெல்லாம், இத்தகைய பெருங் கூட்டம் கூடும் நிலை, வளர்ந்துள்ள நிலை, பயன்படவேண்டும், பயன்படுத்தப் படவேண்டும் என்று விரும்புகின்றனர். ஆர்வங் காரணமாகத் துடிதுடிக்கின்றனர் என்பதையும் நான் நன்கு உணர்ந்துதான் இருக்கிறேன்.

நமது இயக்கம், இயக்கத்தின் வளர்ச்சி, சந்தனக் கட்டையைப் போன்று மணம் வீசுகிறது, நன்றாகத் தெரிகிறது. அதனை உடனே சிற்பமாகச் செதுக்க வேண்டும் என்கின்றனர், தோழர்கள். நான், பொறுங்கள், தக்க நேரத்தில், செதுக்குவோம்; தப்பான சித்திரத்தை, அவசரத்தில் செதுக்கிவிடக்கூடாது என்றுதான் கூறுகிறேன்.

சவுக்குக்கட்டை கூடக் கிடைக்காது வாடியிருந்த காலமும் இருக்கத்தானே இருந்தது, நமக்கு? ஆனால்

இன்று மணம் மிக்க சந்தனச் சோலையே கிடைத்திருக்கிறது, பொறுங்கள், புதுமணம் நுகருங்கள், புதிய உற்சாகம் பெறுங்கள்; சந்தனக் கட்டையை, தக்க நேரத்தில், தக்க முறையில், தக்க உளி கொண்டு சிற்பமாக, திராவிட நாட்டுச் சிற்பமாகச் செதுக்குவோம், சந்தன மணம் கமழும் சந்தோஷமான நாளை ஆவலுடன் எதிர் பார்ப்போம். அதற்கிடையே ஆக்க வேலைகளைக் கவனிப்போம்! நாடு முழுதும் நல்ல பிரசாரப் பணி புரிந்து வருவோம்.

நாம் மாநாடு கூட்டுகிறோம், நமது மாநாடுகளிலே, இவ்வளவு ஏராளமான மக்கள் கூடுகிறார்கள் என்றால் காரணமற்றா? கருத்தற்றா?

எதைக் கண்டு இத்தகை பெரும் கூட்டம் கூடுகிறது? அருளாளர்களைத் தரிசிக்கக் கூடுகிறார்களா? அசகாய சூரர்களைக் காணக் கூடுகிறார்களா? சாமான்யர்களாகிய நாங்கள்தானே கூட்டுகிறோம் மாநாட்டை!

மாநாடுகளிலே நமது நண்பர்கள் தரும் அறிவு விளக்கம், வரலாற்று ஆதாரம், அச்சத்தைத் துடைத்திடும் வீர வுரைகள், சந்தேகத்தைப் போக்கிடும் தெளிவுரைகள், அசைக்க முடியாத புள்ளி விபரம், இவைகளைக் கேட்கத்தான் கூடுகின்றனர்.

மக்கள் இத்தகைய விளக்க உரைகளைக் கேட்டுத் தெளிவும் துணிவும் பெறுகின்றனர் — எனவேதான் நம்மிடையே கூட்டம் பெருகிடக் காண்கிறோம்—கழகம் வளர்ச்சி பெறுவதைப் பார்க்கிறோம்.

இந்த 'பேச்சுக் கச்சேரி,' வேறு எதற்கெல்லாம் வழி வகுத்துத் தந்திருக்கிறது என்பதையும் எண்ணிப் பாருங்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்ட போதே, போலீஸ் தடியடியும், சிறைவாசமும் கண்டோம், துப்பாக்கிகளைச் சந்தித்தோம் — அதைவிடக் கொடுமையான தூற்றல் நம்மைத் துளைத்தன! எப்படித் தாங்கிக்கொள்ள முடிந்தது, நம்மால் இவைகளை!

இதோ, இதுபோன்ற 'பேச்சுக் கச்சேரிகள்,' மூலம், நாமும் உரம் பெற்றோம், — நாடும் உரம் பெற்றது!

இதற்கு உள்ள சூட்சும பலத்தை அறிந்த சிலர், தமக்குச் சாதகமாக, இந்தப் பலம், 'பேச்சுக் கச்சேரிகள்,' அமைய வில்லையே என்பதனால், பேசுவதே பாபம், பெருங் கூட்டத்தைச் சேர்ப்பது துரோகம், மாநாடுகள் நடத்துவது மகாபெரிய துரோகம் என்றெல்லாம் பேசுகிறார்கள்; பரிதாபமாகத்தான் இருக்கிறது!

இதைப் போலவே, தி. மு. கழகம், சினிமா நாடகத் துறைகளிலே, மறுமலர்ச்சியை உண்டாக்கி வருகிறது — கலைத்துறையினர் பலர் நமது கழகத்திற்கு ஆதரவாக உள்ளனர். இதைக் கண்டு, 'சினிமாக் கட்சி,' என்று கேலி பேசுகிறார்கள்,—கேட்கிறோம்.

சினிமாத் துறையிலே ஈடுபட்டவர்கள் ஒருசிலர், ஒரு கழகத்திலே கலந்து பணியாற்றுவது தவறா!

சினிமா அவர்களுக்கு ஒரு தொழில்; அவ்வளவே! கொள்கைப் பற்றும், பொதுப் பணி புரிய வேண்டும்

என்ற ஆர்வமும் அவர்களை இங்கே (தி. மு. கழகம்) அழைத்து வந்திருக்கிறது! இதிலே என்ன தவறு!

கள்ளுக்கடை வியாபாரிகள் சிலர் ஒரு கட்சியிலே ஈடுபட்டிருந்தனரே, கட்சிக்கு கள்ளுக்கடை கட்சி என்று பெயரிட்டனரா, யாராவது—கற்பூரக் கடைக் காரர் யாராவது ஒரு கட்சியிலே இருந்தால், அந்தக் கட்சிக்கு ஜோதி கட்சி என்று பெயரிடுவதா? என்ன அர்த்தமற்ற பேச்சு!

ஆனல், 'சினிமாக் கட்சி,' என்று ஏன் கேலி பேசுகிறார்கள் என்பது புரியாமல் போகவில்லை—நன்ருகப் புரிகிறது!

இத்தகைய கேலி, கிண்டல் பேச்சுக்களை யார் பேசினலும், அது பெரியார் அவர்களைத் தவிர, மற்றவர்களாகத் தான் இருக்கும், இருக்க முடியும்.

பெரியார் அவர்கள் இத்தகைய முறையிலே பேச மாட்டார்! ஏன்? கலைத்துறையினர், கட்சிப்பணி புரிய வேண்டும் என்ற கருத்துடையவர் அவர் என்பதால் தான். அதற்கு இதோ ஒரு எடுத்துக்காட்டு!

ஆண்டு பல ஆகிவிட்டன — சந்திரோதயம் நாடகம், சென்னை ஒற்றைவாடை கொட்டகையிலே நடைபெற்றது. அதைக் காண இசையரசு தண்டபாணி தேசிகர், நகைச்சுவை அரசு N. S. கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர், மூவரும் வந்திருந்தனர். நாடக முடிவில் பெரியார் பேசும்போது ஒருபிடி பிடித்தார்—இந்தக் கலாவாணர்கள், முருகா! முருகா! என்று மூன்று மணிநேரம் பாடிவிட்டு, ஆயிரம், இரண்டாயிரம் என்று பணத்தைப் பறித்துக் கொண்டு போகிருர்

களை ஒழிய, இன அபிமானம், சுயமரியாதை இவை களுக்காகப் பாடுபடும் நமது இயக்கத்திலே ஒரு பற்று, பாசம், தொடர்பு துளியாவது காட்டுகிறார்களா! என்று கோபமாகவே பேசினார்!

"என்ன, வரவழைத்து, உட்கார வைத்துக் கொண்டு இப்படி ஏசுகிறீர்களே," என்றனர் மூவரும். அவர்களுக்கு சமாதானம் கூறினேன்.

பிறகு நான் பேசும்போது, பெரியார் கோபப்படும் காரணத்தை விளக்கி, கலாவாணர்கள் எல்லாம் கூடிய சீக்கிரம் நமது கழகத் தொண்டிலே ஈடுபடுவார்கள் என்றும், அவர்களை இந்த மறுமலர்ச்சிப் பாதைக்கு அழைத்து வரும் பொறுப்பு என்னுடையது என்றும் உறுதி யளித்தேன்.

அதுபோலவே, அந்த உறுதியின்படியே, கலைத் துறை விற்பன்னர்கள் இன்று நம்மிடம் உள்ளனர்.

அன்று பெரியார் பேசியபடிதான், சொன்ன முறைப்படிதான், நான் கலைத் துறையினரை, நமது கழகப்பணி புரிய அழைத்து வந்தேன்.

இப்படிப்பட்ட நிலையில், பெரியார் நம்மை சினிமாக் கட்சி என்று எப்படி கேலி பேசுவார், பேச முடியும்?

அதுமட்டுமல்ல, பெரியாரே, ஒற்றைவாடை கொட்டகையிலே தாம் கொஞ்சம் காரசாரமாகத்தான் பேசி விட்டேன்! என்று கூறி வருத்தப்பட்டு, அடுத்த திங்களில், ஈரோடு அங்கே 'கிந்தனார்' காலட்சேபம் செய்த தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்குத் தமது கையினாலேயே ஒரு தங்கச் செயினும், 'கிந்தனார்'

என்று பெயர் பொறிக்கப்பட்ட டாலரையும் பரிசளித்தார்கள்.

ஈரோட்டிலே, நடைபெற்ற, நான் தலைமை தாங்கிய தனி திராவிடர் கழக மாநாட்டில், காந்தியார் படத் திறப்பு விழா நடத்த தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களை வரவழைத்தார் பெரியார் — தமது கையாலேயே கடிதம் எழுதி!

அப்போதெல்லாம் சினிமா கட்சி! அல்ல — இப்போது சினிமாக் கட்சி! என்று ஏசுவதாக நினைத்துக் கொண்டு — சிலர் — பேசுகிறார்கள்.

மேலே குறிப்பிட்ட அந்தப் பழைய சம்பவங்களை அறிந்திருக்கிற எனக்கு, ஏன் கோபம் வரப்போகிறது!

அங்கு இல்லை, இந்தக் கலைவாணர்கள் — அதனாலே ஒரு ஆத்திரம் — அதைப் போக்கிக் கொள்ள எதையோ பேசுகிறார்கள்!

சினிமா கட்சி என்றால், கழக மேடைகளிலும், மாநாடுகளிலும், சினிமா சம்பந்தமான விஷயங்களே பேசப்பட்டு, கழகக் கொள்கைகளை, அரசியல் பிரச்சினைகளை பேசப்படாமல், மறைக்கப்பட்டுப் போய்விட்டால், ஓஹோ! இது சினிமாக் கட்சியாகி விட்டது என்று சொல்லலாம்.

தோழர் கே. ஆர். இராமசாமி அவர்கள் கழக மேடையிலே பேசும்போது 'சினிமா பிடிக்க எவ்வளவு செலவு தெரியுமா? சினிமாவில் கல்யாணி ராகம் எப்படிப் பாடவேண்டும் தெரியுமா? நடிப்பது எப்படித் தெரியுமா', என்று பேசுகிறார்? இல்லையே?

இதோ எனக்கு முன்பு தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் பேசினார். எதைப்பற்றி! 'ஜெனோவா,' படத்திலே எனக்கு எப்படி மேக்கப் செய்தார்கள் தெரியுமா? வலது கரத்தில் வாளை ஏந்தியதும், இடது கரம் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா? காமிரா அப்போது எங்கே இருக்கும் தெரியுமா?—என்று இதை யெல்லாமா பேசினார்? பேசினால் சினிமா கட்சிதான்.

அவர் பேசியது அது அல்லவே! அவருக்குத் தொழில், சினிமா! அதையுங்கூட பகுத்தறிவுத் துறைக்குப் பக்கபல மாக்குகிறார்!

இங்கு, மாநாட்டிலே அவர் பேசியது, சினிமா சம்மந்தமாகவா? இல்லையே!

திராவிடர், திராவிடநாடு பெறுவது எப்படி, திராவிடச் சமுதாயத்திலே விழிப்புணர்ச்சி ஏற்படுவது எங்ஙனம்? கழகத்திலே கட்டுப்பாடு எப்படி இருக்க வேண்டும், மாநாடுகளிலே எப்படி ஒழுங்கு முறை காணப்பட வேண்டும் என்ற இவைபற்றி அல்லவா, பேசினார்!

இதற்கா சினிமா கட்சி என்று பெயர்! என்ன தெளிவு! ஏன் இந்தப் பேச்சு!

அங்கே இல்லை, இங்கே உண்டு — அதுதானே காரணம்!

ஒரு நாடு விடுதலை பெற வேண்டுமானால் இனம் விழிப்படைய வேண்டும். இனம் விழிப்படைந்தால், எல்லாத் துறைகளிலேயும் மறுமலர்ச்சி ஏற்படும் — அதை இன்று காண்கிறோம் — எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், இன எழுச்சிக்கும் விடுதலைக்கும் பாடு

பட வேண்டும் என்ற ஆர்வம் பிறக்க வேண்டும் — அதன் விளைவுதான், தி. மு. கழகத்தில் ஏராளமான கலைத் துறையினர் ஈடுபடுவது!

கழக வெற்றியிலே இது ஒரு கட்டம்—எழில் உள்ளது — எனவே மாற்றார் உள்ளத்திலே எரிச்சலை ஊட்டுகிறது! என்ன செய்வது!

நான் பெரியாரிடம் கேட்ட பாடத்தைத் தானே கடைப்பிடிக்கிறேன்! அவர் தந்த பாடத்தை மறக்கவுமில்லை, மற்றெங்கும் அடகு வைக்கவுமில்லை! பாடத்தை அப்படியே நிறைவேற்றி வருகிறேன்.

கலைத் துறையினர் இங்கு இருப்பதைக் கண்டு கேலி பேசுவதும், வீணுரை வழங்குவதும் ஏன் என்பதும் புரியாமல் போகவில்லை — நன்றாகப் புரிகிறது என்று குறிப்பிட்டேன்.

ஏன் கேலி பேசுகிறார்கள்! குறை கூறுகிறார்கள்! நிலைமைக் கோளாறு தான் முக்கிய காரணம்!

அங்கே இல்லை—இங்கே உண்டு என்பது மட்டுமல்ல, அவர்களால் இயலவில்லை, முடியவில்லை; ஆனால் நம்மால் முடிகிறது என்ற பொறாமையின் காரணமாக, பொச்சரிப்பின் காரணமாகத்தான் தூற்றுகிறார்கள்.

கலைவாணர்களைத் தம் கட்சிக்குள் அழைத்துக் கொள்ள சிலரால் முடியவில்லை — குறை கூறுகிறார்கள் நம்மைப் பார்த்து. சிலர் அழைத்தார்கள்—ஆனால் கலைத் துறையினர் இங்கேயே தான் இருக்கின்றனர்—அவர்களால் இயலவில்லை. எனவே தூற்றுகிறார்கள் முன்பின் யோசியாது! அர்த்தமற்ற பேச்சு என்று ஏற்

கனவே குறிப்பிட்டபடி இதனை நாம் கவனிக்கத்தேவை யில்லை என்று மீண்டும் கூறுகிறேன்.

இயலாமை எங்கே இருக்கிறதோ அங்கே பொறுமை தானுக எழும்; பொறுமையைத் தொடர்ந்து, பொச்சரிப்பு புகை, பகை என்று வளரும். நாம் அதனைக் கவனிக்கத் தேவையில்லை.

எனது 15 — 20 வருட அரசியல் அனுபவத்தைக் கொண்டு, யார், யார் ஏன் தூற்றுகிறார்கள், எதற்காக, எதுவரை தூற்றுவார்கள், எப்போது நிறுத்திக்கொள்வார்கள் என்பது பற்றிய கணக்கு வைத்திருக்கிறேன். தூற்றுபவர் தூற்றட்டும், வாய்சலிக்கும் வரை கவலைப்படவேண்டாம்.

மாற்றார்கள் மட்டரகமாகத் திட்டித் திரிகிறார்கள், மனம் பொறுக்கவில்லை .என்று நண்பர்கள் பேசினார்கள்.

பிறர் தூற்றுதலைக் கண்டு ஆத்திரம் பிறக்கக் கூடாது. தூற்றுதலைத் தாங்கிக் கொள்ளும் மன உறுதி வேண்டும்.

யார் யாரோ தூற்றினார்கள்—தூற்றிவருகிறார்கள் —மேலும் தூற்றுவார்கள்; தூற்றுவதைக் கேட்டு துடித்தெழ வேண்டியதில்லை.

நாம் செய்யும் பணி—பகுத்தறிவுப் பணி சாமான்யமானதல்ல. பலருக்கு எரிச்சலை ஊட்டும். சிலருக்குக் கோபத்தைக் கிளறிவிடும். சிலர் பாய்வர்—பலர் சீறி விழுவர். இது சர்வ சாதாரணமாக நாம் எதிர்பார்ப்பவைதானே! எந்தப் பகுத்தறிவுக் கொள்கையையும்

மக்கள் சுலபத்தில்—உடனே—எடுத்த எடுப்பிலேயே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எதிர்ப்புகள்—தூற்றல்கள்—ஏளனங்கள் கிளம்பித்தான் தீரும்.

நாம் என்ன சாதாரண விஷயங்களையா பேசுகிறோம். பலபேர் மனதார நம்பி—கடைப்பிடித்து வரும் கொள்கைகளைக் கண்டிக்கிறோம்—பழக்க வழக்கங்கள் பகுத்தறிவுக்கு ஏற்றவையல்ல — பாழானவை—தீங்கு பயப்பவை என்று வெளிப்படையாகப் பேசுகிறோம்.

கடவுளைக்கூட நாம் விடவில்லையே! கடவுள் எப்படிப்பட்டவர் என்பதைப்பற்றி யார் யாரோ, மூவர், தேவர், முற்றுந்துறந்த முனிபுங்கவர், அருளாளர்கள்—அவதாரபுருடர்கள், ஆண்டவன் தூதர்கள் என்போர் கூறியுள்ளவையென்று கூறப்படும் கருத்துக்களை—கொள்கைகளை—கோட்பாடுகளைக் கண்டிக்கிறோம்—கண்மூடித்தனம் என்று எடுத்துக் காட்டுகிறோம். இதை அவ்வளவு சுலபத்திலே, காலமெல்லாம் கண்மூடிக் கொள்கைகளிலே ஆழ்ந்து கிடக்கும் மக்கள் எதிர்ப்பின்றி ஏற்பரா?

அவர்களுக்குக் கோபம் வரும். அதைவிட மக்களிடம் குடிகொண்டுள்ள அத்தகைய பழமைக் கொள்கைகளையும், குருட்டு நம்பிக்கைகளையும் தமது வாழ்க்கைக்கு வளமான பாதையென வகுத்துக்கொண்டிருக்கும் குருமார்கள்—போதகர்கள்—மேல் ஜாதிக்காரர்கள் எனப்படுவோர் மிகவும் ஆத்திரப்படுவர் — மக்களிடம் ஏற்கனவே பெற்றுள்ள செல்வாக்கைக் கொண்டு மக்களை நம்மீது ஏவி விடுவர்.

நாத்திகர் என்று ஏசுவர்—நாட்டிற்கே நாசகாலம் வரப்போகிறது என்று பயமுறுத்துவர். ஆகாத பேச்சு தகாதபோக்கு என்று மருட்டுவர்.

எவ்வளவோ காலமாக மக்களை ஏய்த்துப் பிழைத்து வந்த கூட்டம் சுலபத்தில் நம்முடைய கொள்கையைக் கேட்டு திருந்தி விடாது, அதைவிட எல்லாவித வழி களிலும் நம்முடைய பணி பயன்படாது பாழாக்கும் வழிகளையே முழு மூச்சாகத் தொடர்ந்து செய்துவரும் என்பது மிகவும் உறுதி!

எடுத்ததற்கெல்லாம் எதிர்ப்பு — சொல்வதற்கெல் லாம் மறுப்பு—செய்வதற்கெல்லாம் ஏளனம் ஏசல்— பூசல் எங்கெங்கிருந்தோ கிளம்பும்—கிளம்பிற்று!

இதற்காக அஞ்சி யோடி ஒளித்தோமா, இது வரை; இல்லையே!

பிறர் தூற்றுவதைப்பற்றி அக்கரை காட்டி, ஆத்திரப்படக் கூடாது. கொள்கையிலே உறுதியும், செயல் முறையிலே கட்டுப்பாடும், தளராத தன்னம் பிக்கையும் கொண்டு நாம் நமது ஆக்க வேலைகளைக் கவனித்துச் செல்ல வேண்டும்.

வானம் கறுத்து, மேகம் திரண்டு தூற்றல் போட ஆரம்பித்தவுடன், மண்வெட்டியைத் தோளில் ஏந்தி, மடை கட்டுவதற்காக கழனியை நோக்கிச் செல்லும் உழவனைப் போல, நாமும் தூற்றல்களுக்கிடையே, துணிந்து நின்று, நமது கழகப் பணியைத் தொடர்ந்து செய்தாக வேண்டும்.

பிறர் தூற்றுதல் வெறும் குப்பை—அது எருவுமா கும் நமது கழனிக்கு. தூற்றலை அம்மோனியம் சல்பேட்

டாக உபயோகிப்போம். தூற்றிலின் தன்மையைப் புரிந்துகொள்ளும் மக்கள் நம் பக்கம்தானே சேர்வர்! எனவே தூற்றுதலால் நமது கழகப் பயிர் செழிக்கும் —வளரும் என்பது உறுதி.

தூற்றலால் என்ன கெடுதி ஏற்பட்டுவிட முடியும் என்று கருதுகிறீர்கள்? பிறர் தூற்றலால் நசித்துவிடக் கூடியதா நமது கழகம்—நமது பணி—நமது உறுதி! என்று கேட்கிறேன்.

நாங்கள் என்ன தூற்றப்படவே கூடாத உயர்ந்த நிலையை அடைந்து விட்டவர்களா? ஏன் பதைக்கிறீர்கள், எங்களை யாரேனும் தூற்றினல்!

ஏதோ, சம்பத் — கருணாநிதி — நெடுஞ்செழியன் ஆகியோரையும், என்னையும் யாரோ சிலர், ஏதோ தாறுமாருகப் பேசினல், பேசிவிட்டுப் போகட்டும்! அங்க அடையாளங்களைக் கூடக் குறை சொல்லுமளவுக்கு மாற்ருர் மட்டரகமாகத்தான் போகிருர்கள்.

போகட்டும்; இன்னும் எவ்வளவு கேவலமாக வேண்டுமானலும், கீழ்த்தரமாக வேண்டுமாலும் சொல்லட்டும். சொல்லிச் சொல்லி அலுக்கவேண்டும். அலுத்து அலுத்து அடங்கும் வரை சொல்லட்டும்.

அவர்களை எதிர்த்து நாமும் திரும்பத் தூற்றுவதா! வேண்டாம், கூடவேகூடாது.

இத்தகைய சாமான்யர்கள், இவ்வளவு பெரிய இயக்கத்தைக் கட்டிக்காக்கிருர்களே என்ற பொருமையும், பொச்சரிப்பும் தான், எப்படியெல்லாமோ, நம்மை மாற்ருர் தூற்றும்படி செய்கிறது. தூற்றட்டும்

தாங்கிக்கொள்வோம். வேறென்ன செய்ய முடியும், அவர்களால்?

கொலைகாரன், அடுத்துக்கெடுப்பவன், அகப்பட்டதைச் சுருட்டுபவன் என்றெல்லாம், என் அரசியல் தந்தை பெரியார் அவர்களே தாக்கினர் — தாங்கிக் கொண்டேனே! அவரே அவ்விதம் தூற்றியான பிறகு, மற்றவர்கள் தூற்றுவது தூற்றலாகவா தெரியும், எனக்கு !

பெரியார் அவர்கள் என்னைத் தூற்றியதைக்கூட, எனக்கு அவர் தந்த கடைசி பாடமாக தூற்றலைத் தாங்கிக்கொள்ள என்னைப் பண்படுத்தியதாகத்தான் ஏற்றுக்கொண்டேன்.

அரசியலில் யார் யாரோ எப்படி எப்படியெல்லாமோ தூற்றுவார்கள். அதைத் தாங்க மனவலிமையும், தாங்கும் திறனும், பொறுமையும் வேண்டும். 'முதலில் நானே தூற்றுகிறேன்—தாங்கிக்கொள்—பிறகு எவர் தூற்றினலும் உன்னல் தாங்கமுடியும்' என்ற எண்ணத்தினல்தான் — எனக்குத் தரும் கடைசி பாடமாக— என்னைத் தூற்றினர் பெரியார் என்றுதான் ஏற்றுக் கொண்டேன்.

தூற்றலைத் தாங்கிக்கொள்வது எப்படி என்ற கடைசி பாடத்தை — பெரியாரிடமிருந்து பெற்றுள்ள எனக்கு, பிறர் தூற்றல் எம்மாத்திரம்! எனவே தூற்றல் கேட்டு ஆத்திரம் கொள்ளாதீர்கள்!

தூற்றலைத் தாங்கிக்கொள்ளும் சக்தி பெற்றவர்கள் நிச்சயம் நல்ல காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதை மனதில் நிறுத்த வேண்டுகிறேன்.

தூற்றலைக் கேட்டு ஆத்திரப்பட்டு, மறுப்புரை வழங்குவது பெரிய கடினமான காரியமல்ல. நமக்கு அந்த வேலை தேவையில்லை.

நாம் நமது கழக வேலைகளைக் கருத்தோடு கவனித்துச் செல்வோம். நமது சொல்லும் செயலும், தூற்றுவோரின் மனதையும் மாற்றவல்லதாக அமைய வேண்டும்.

இத்தகைய முறையிலே நாம் நமது கடமையைச் செய்துவர வேண்டுகிறேன்.

நம்முன்னர் எத்தனையோ முக்கியமான பிரச்சினைகள் குவிந்து கிடக்கின்றன. எல்லாவற்றையும்விட, நாம் வடநாட்டுப் பிடியிலிருந்து விடுபட்டாகப் பெரும் போர் புரிந்தாக வேண்டும்.

அத்தகைய இறுதிப் போராட்டத்தை எதிர் நோக்கியுள்ள நாம், மிகமிகப் பெரும் பொறுப்பு வாய்ந்தவர்களாகவும், கட்டுப்பாடுடையவர்களாகவும், காரியமாற்றும் கருத்துமிக்கவர்களாகவும் விளங்கவேண்டியது மிகவும் முக்கியமே தவிர, பிறர் தூற்றல் கேட்டு துடிதுடிப்பதும், துடுக்குத்தனமான பேச்சுகளுக்கு மறுப்புரை வழங்கிக் காலத்தை வீணாக்குவதும் அல்ல, அல்ல என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

பிறர் தூற்றல்களைத் தாங்கியாக வேண்டும், ஆட்சியாளரின் கொடுமையான அடக்குமுறைகளைத் தாங்க வேண்டும்—அதோடு நமது பணியை விடாதுதொடர்ந்து செய்தாக வேண்டும். அப்போதுதான் நமது திராவிடத் தனியரசுக்கான இறுதிப்போர் துவக்கப்படும்.

நம்மிடையே கட்டுப்பாடு மிகவும் பலமாக அமைய வேண்டும். அப்போதுதான் இறுதிப் போராட்டம் துவக்க நாம் லாயக்குள்ளவர்க ளாகமுடியும்.

நான் இந்த மேடையிலிருந்துகொண்டு, ஒரு கோடியிலோ, அல்லது ஒரு மூலையிலோ உள்ள ஒரு குறிப்பிட்ட நபரைக் காட்டி, அவரை மட்டும் எழுந்து நிற்கும்படி கூறினல் அவர் மட்டுந்தான் எழுந்து நிற்கவேண்டும். மற்றவர் அதுபற்றிய அசைவோ, சலசலப்போ சிறிதும் ஏற்படுத்தக்கூடாது.

அத்தகைய கட்டுப்பாடு, பொறுப்பு, செயல்முறை, நம்மிடம் எப்போது வருகிறதோ, காணப்படுகிறதோ அப்போதுதான் நமது இன விடுதலைப்போர் துவக்கப் படும் என்பதை நினைவில் நிறுத்தி, அதற்காக நம்மை நாம் பக்குவப்படுத்தித் தயார் செய்துகொள்ளவேண்டும்.

போராட்டம் வேண்டும், போராட்டம் வேண்டும் என்று நண்பர்கள் அடிக்கடி கூறுகிறார்கள்.

போராட்டத் திட்டம், ஏதாவது ஒரு போராட்டம் தேவை, தேவை என்ற அரிப்பின் காரணமாக ஏற்படக்கூடாது — அதைச் செய்வோமா — இதைச் செய்வோமா என்று ஒரு அரசியல் கட்சி மனதை அலையவிடக்கூடாது. அதேபோது, போராட்டத்துக் குரிய பிரச்சினை எழுந்தால், விடக்கூடாது—இதுதான் நான் சொன்னது லால்குடியில்—சொல்வது இப் போதும்.

இதை எங்கே கற்றேன்—இது யாரிடம் கேட்ட பாடம் தெரியுமா? இது பெரியாரிடம் கற்ற பாடந்தான்

—கேட்ட புத்திமதிதான் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ளத் தயங்கவில்லை.

கட்டுப்பாடற்று, கண்ட கண்ட போராட்டங்களிலே தலையிட்டு, பின்னர் கண்ணைக் கசக்கிக்கொள்ளும் கருத்தற்ற தளபதியாக இருக்கமாட்டேன்; கவனத்தில் வையுங்கள்.

அரசியல் கட்சிகள் ஆள்பலம், ஆதரவு இல்லாத காலத்தில் போராட்டங்களைத் தேடித்திரியும். போராட்டங்களைத் துரத்திப் பிடிக்கும்.

நாமென்ன ஆள்பலம் அற்றவர்களா, அல்லது படை பலந்தான் நம்மிடம் குறைவாக உள்ளதா? நாம் ஏன் போராட்டங்களைத் தேடித்திரிய வேண்டும் வீணாக.

ஒருசிலரிடம் படைபலமில்லை, ஆனால் தளபதிகள் ஏராளமாக இருக்கிறார்கள். அங்கே வேண்டுமானால் போராட்டங்களைத் தேடித்திரியட்டும். நமக்கேன், வீண் போராட்டங்கள்? நம்மிடம் படைகள் ஏராளம், தளபதிகளும் ஏராளம். நாம் ஏன் போராட்டம் இல்லையே என்று தேடியலையவேண்டும்?

வீணான போராட்டங்களை வலிய இழுத்து மேலே போட்டுக்கொள்ளக்கூடாது. ஆனால் வந்த போராட்டங்களையும் இலேசில் விடக்கூடாது.

தலையிலே மூட்டை சுமந்து வீதி வீதியாக விற்கும் நடுத்தெரு வியாபாரிக்கும், கடைவீதியிலே நல்ல நாணயமான கடை வைத்திருக்கும் வியாபாரிகளுக்கும் வித்தியாசமே கிடையாதா? அதுபோல பண்பு, பக்குவம்,

படைபலம் அத்தனையும் உள்ள நாம் போராட்டங்களைத் தேடியா திரியவேண்டும்.

நாணயமும், நல்ல சாமான்களும் உள்ள கடைக்குச் சென்று மக்கள் தாமாகவே சாமான்கள் வாங்குவது போல, நம்மிடம் போராட்டப் பிரச்சினைகள் எழும் போது நாம் போரிடத் தயங்கமாட்டோம்.

போராடவே முடியாதவர்களல்ல; தி. மு. கழகத்தினர். தழும்புகள் பல பெற்றவர்கள், போராட்டங்களிலே!

இந்த இயக்கம் ஒரு ஜனநாயக ஸ்தாபனம். இங்கே ஒரு கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. அதற்கேற்றபடி கட்டுப்பாடுடன் கூடிய, பொறுப்பான முறையிலே தான் போராட்டங்களில் இறங்க முடியும், இறங்க வேண்டும். அதுதான் ஒழுங்கு—முறை!

அதனாலேதான் போராட்டத்தில் இறங்க வேண்டுமானால் தக்க ஆலோசனை செய்யவேண்டும். தேடித் திரிந்து எதையாவது செய்யக்கூடாது என்று குறிப்பிடுகிறேன்.

போராட்டம், போராட்டத் திட்டம் திடீர் திடீரென்று அமைக்க முடியாதா, நம்மால்? ஏன் முடியாது? முடியும்!

'சர்க்கார் அரிசி கடைகளிலே நல்ல அரிசி கிடைக்கவில்லை. விலையும் அதிகம்' என்று 'விலை மறுப்புப் போராட்டம்' என்ற பெயரில் ஒரு போராட்டம் துவக்க முடியாதா? சரியல்ல என்று கூறிவிட முடியுமா?

அதுபோலவே, கரும்பு, புகையிலை பயிரிடும் நிலங்களில் சாகுபடி செய்யும் போது சென்று தடுத்து, இங்கே நெல்தான் விளைவிக்க வேண்டும் என்று அறப்போர் தொடுக்கலாம் 'உணவுப் பொருள் பாதுகாப்புப் போராட்டம்', என்ற பெயரிலே! இப்படிப் பல பல போராட்டங்களை தினந்தினம் உற்பத்தி செய்து, நாமே வலிய போராட்டக் களத்திலே குதிப்பது முறையன்று, ஆனல் போராட்டச் சூழ்நிலை உருவாகும்போது நிச்சயம் குதிக்கத் தவறவே கூடாது.

முன்னர், கடந்த ஆண்டு ஆகஸ்டில் நாம் இந்தி எழுத்து அழிக்கும் அறப்போரில் பெரியாருடன் கலந்து தொண்டாற்றினோம். அதற்குக் கிடைத்த பரிசு என்ன?

பரிசு தராவிட்டால் போகட்டும்! இவர்கள் ஏற்கனவே கோவில்பட்டியில் போட்ட தீர்மானந்தான் இது என்று பாராட்டாவிட்டால் பரவாயில்லை, சீராட்டாவிட்டால் போகட்டும்; இப்போதுதான் புத்தி வந்தது என்ருவது சொல்லக் கூடாதா? எதுவும் இல்லை.

'வலிய வந்து கலந்து கொண்டனர்' என்பது தானே நாம் பெற்ற பரிசு, நமக்குக் கிடைத்த பேச்சு. அதற்காக நாம் கவலைப்பட்டோமா? இல்லை.

நமது போக்கைக் கண்டு, பலர் பலவிதமாகப் பேசக்கூடும், சிலர் எப்படிப் போனலும் எதையாவது நேர்மாருகப் பேசிக் கொண்டுதான் இருப்பர்.

இதை யெல்லாம் கவனித்து, காது கொடுத்துக் கொண்டிருந்தால், நமது வேலை, வீணே தடைபடும்

என்பது தவிர வேறு உருவான பலன் காண மாட்டோம்.

ஒரு சோலையிலே ஒரு குருவி இருந்ததாம். அதனிடம் ஒரு காசு இருந்ததாம். அந்த வழியே ஒரு அரசன் போனானாம்.

குருவி அரசனைப் பார்த்து 'ராஜாவே, ராஜாவே, என்னிடம் கால் காசு இருக்கிறது' வேணுமா? வேணுமா? என்று கேட்டதாம்.

ராஜா இதைக் கேட்டு, நமக்கு ஏன் குருவியோடு வீண் பேச்சு என்று தன் வழியே போனானாம்.

குருவி விடவில்லை. மீண்டும் 'ஐய்யய்ய இந்த ராஜா பதில் சொல்லாமல் சும்மா போறாரே! என்றதாம்.

இதைக் கேட்ட ராஜா 'கால்காசு எனக்கு வேண்டாம்' என்று மேலே போகத் தொடங்கினார்.

மீண்டும் குருவி 'இந்த ராஜா பிகுவுக்காக கால் காசு வேண்டாம் என்கிறார்', என்று கூவியதாம்.

குருவியின் தொல்லை ஒழியட்டுமே என்று ராஜா 'சரி, கால் காசு கொடு, குருவியே' என்று கேட்டாராம்.

குருவி கால் காசைக் கொடுத்து விட்டது. ராஜா புறப்பட்டார். குருவி சும்மா இருந்ததா? இல்லை.

'கால் காசுகூட இல்லாத ராஜா இந்த ராஜா,' என்று கேலி செய்ததாம், குருவி.

இதைக் கேட்ட ராஜா 'உன் கால் காசும் வேண்டாம், இந்தப் பேச்சை நான் கேட்கவும் வேண்டாம்,' என்று காசை வீசி யெறிந்து விட்டாராம். அப்போதும் குருவி சும்மாயில்லை.

'பைத்தியக்கார ராஜா, வீம்புக்காக காசை வீசி விட்டாராம்,' என்று வேறு கத்திக் கேலி செய்ததாம்.

ஏதோ கதை இது. ஆனால் எப்படிப் போனாலும், எதை சொன்னாலும் குதர்க்கம் செய்து கேலி பேசிடும் அந்தக் குருவி புத்தி படைத்த மனிதர்கள் சிலர் இருக் கிறார்கள் என்பதை நாம் நன்குணர்ந்து, பிறர் என்ன சொல்லுகிறார்கள், பிறர் மெச்ச வேண்டும் என்பதை யெல்லாம் கவனியாது நமது குறிக்கோள் வழியே நடந்து செல்வதுதான் நமக்கு அழகு — நல்லதுங்கூட.

இப்போது தோழர் கருணாநிதியிடம் ஒரு போராட் டம் — டால்மியாபுரம் போராட்டம் ஒப்படைக்கப்பட் டிருக்கிறது. சூழ்நிலை அருமையாக உருவாகி இருக் கிறது. ஜூலை 15-ல் போர்த்துவக்கம். தோழர் கருணா நிதியிடம் கலந்து பேசி, முறையும் வகுத்தாகி விட்டது.

இந்த நிலையில், இது ஒரு பிரமாதமான போரா? என்கிறார்களாம், கம்யூனிஸ்டுகள்? அவர்களுக்கு இதெல்லாம் 'சப்பை'யான, 'அற்ப'மான போராட்ட மாகத் தோன்றக்கூடும்!

கென்யாவுக்கு ஒரு படையும், சிலோனுக்கு மற் றோர் படையும், ஆப்ரிக்காவுக்கு ஒரு படையும் — இப் படி களம் எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் படைகளை அனுப்பிவிட்டு—சேதியை எதிர் பார்த்திருப் பவர்கள் போல — டால்மியாபுரம் போராட்டம் பெரிதா பிரமாதமா? தேவைதானா? என்று பேசுகிறார்கள்!

சூரர்கள், அசகாய சூரர்கள், வீராதி வீரர்கள் என்று கருதிக்கொண் டிருக்கும் அவர்கள் தான் நல்ல போராட்டம் நடத்தட்டுமே, நாம் என்ன வேண்டா

மென்று தடுத்து நிறுத்துகிறோம்! வேண்டாம், வேண்டாம் என்று வேண்டுகோள் விடுகிறோம்! இல்லையே!

தாங்கள் செய்வதுதான் சரியென்று நம்பினால் செய்துகொண்டு போகட்டும். அதற்காக மற்றவர்கள் போராட்டத்தை கேலி செய்வதா? நல்லதல்ல, அரசியல் நாகரிகத்திற்குப் புறம்பான செயலுமாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றவனுடைய மனைவியின் வாய்கோணல், மூக்கு நீளம், காது குட்டை, கண் சரிவு முகம் மூளி என்று கொண்ட கணவனிடமே வர்ணிப்பது எவ்வளவு அநாகரிகமான செயலோ, அவ்வளவு அநாகரிகமானதுதானே அரசியல் வாழ்வில், ஒருகட்சி, வேறொரு கட்சியின் திட்டத்தைப் பற்றிப் பேசுவதும், அர்த்தமற்றக் குற்றங் குறைகள் கூறுவதும்!

இந்த அரசியல் அநாகரிகப் போக்கை அவர்கள் கைவிட வேண்டும் என்று விரும்புகிறேன்.

அவர்களது மொழி கேட்டு, திட்டப்படி நடக்க வேண்டுமென்று, நமது ஆசிரியர்கள் என்ற நினைப்பில் நமது திட்டங்களைப் பற்றிய தேவையற்ற பரிசீலனையில் இறங்குகின்றனர், அவர்கள்.

குறிப்பிட்டுக்கூற வேண்டுமானால், நான், அவர்களைக் கம்யூனிசத்தின் மாணவர்களாகத்தான் கருதுகிறேன் — அப்படிப் பட்டவர்களை எப்படி, ஆசிரியர்களாகக் கொள்ள முடியும் என்று கேட்கிறேன்!

கம்யூனிஸ்டுகள் கூறுவது பற்றியும் கவலைப்படத் தேவையில்லை என்று மறுபடியும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

7591

நாம் கவனிக்க வேண்டியது, இவர்கள் பேச்சையு மல்ல — போக்கையும் அல்ல. போராட்டத்திற்குரிய பிரச்சினைதானா இது — நாம் எடுக்கும் முடிவு நமக்குச் சரிதானா — திருப்திதானா? தேவைதானா—என்று நமக்குள் பேசி முடிவுகட்ட வேண்டும்.

தீட்டிய திட்டம், நாம் கலந்து பேசியதன் விளைவா என்பது தெரிய வேண்டும். அதுதான் நமக்கு முக்கியமே தவிர, நமது மனைவி நமது கண்ணுக்கும் கருத்திற்கும் பிடித்தவளாக இருக்க வேண்டுமே தவிர, எதிர் வீட்டுக் காரன் தீர்ப்பா நமக்கு முக்கியம்?

எனவே அந்த ஏளனத்தை நான் சிறிதும் பொருட் படுத்தவில்லை — நாம் பொருட்படுத்தக் கூடாது. அவை களை ஒதுக்கிவிட்டு, நாம் ஒதுங்கிச் (By Pass) சென்று நம் வேலைகளைக் கவனிக்க வேண்டும்.

நமக்குள்ளே கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்று குறிப்பிட்டேன். அதை எப்பொழுதும் மறந்து விடக்கூடாது.

கூட்டுப் பொறுப்பை யெண்ணி, கூடிக் கலந்து பேசி, விவாதித்துத் தெரிந்து, தீர்மானித்த பிறகே எத் தகைய திட்டங்களும் — குறிப்பாக போராட்ட திட்டங் கள் தீட்டப்பட வேண்டும்,

சில கட்சிகளில் தனி மனிதர் போராட்டத்தைத் தொடங்குவார். கட்சிக்காரர்கள் கலந்து கொள்வர். தோல்வி கிடைத்தால் அறிக்கை பிறக்கும் — பரவா யில்லை — தோல்வியே வெற்றி யென்று, கட்சிக்கார ரும் திருப்தி யடைவர். இங்கே அப்படி முடியாது — கூடவுங் கூடாது.

மலைமீது ஏற வேண்டுமென்றால், முன்னர் யோசிக்க வேண்டும். ஏன் ஏற வேண்டும்? அவசியம் தானா? பலன் தரும் வேலையா? ஏறித்தான் ஆகவேண்டுமா? என்று முன்கூட்டி அலசிப் பார்க்கவேண்டும்.

அதுமட்டுவல்ல! ஏறுவது என்றால் எந்தப் பக்கம் ஏறுவது? எந்தப் பக்கம் போவது? வழுக்குமா? சறுக்குமா? கல் முள் தடுக்குமா? கால்களிலே வலிவு உண்டா? தொடர்ந்துவர ஆட்கள் உண்டா? தடைகளைத் தகர்த்தெறியத் திறமை உண்டா? என்றெல்லாம் கவனிக்க வேண்டும் — பின்னர் ஏறி, வெற்றிமுரசு கொட்ட வேண்டும். அதுமுறை! அதைவிட்டு கண்டபடி ஏறி வழுக்கியோ, தடுக்கியோ கீழே விழுந்து கைகால்களை உடைத்துக்கொள்வது முறையல்ல; முட்டாள்தனமுமாகும்.

நான் இவ்விதம் கூறுவதுபற்றி யாரும் ஆயாசப்படத் தேவையில்லை. எவரையும் குறை கூறவோ, புண்படுத்தவோ கூறவில்லை. உண்மை நிலையைக் கண்ட பிறகுதானே, போர் தொடங்க வேண்டும்? கண்டபடி எதையாவது செய்துவிட்டு, எந்தப் போர்க்களத்திலாவது குதித்து விட்டுத் தோல்வி கிடைத்தால், என் நிலை என்ன ஆகும்?

கூட்டுப் பொறுப்பு மிக்க,இயக்கத்தவரின் கேள்விகட்கு மிகவும் கடமைப்பட்டவனாகவே என்னைக் கருதுகிறேன். எனவேதான் போராட்டத்தைத் துரத்திக்கொண்டு ஓடக்கூடாது; வந்த போராட்டத்தையும் விடக்கூடாது என்று கூறுகிறேன்.

இதனால் நாம் போராட்டத்திற்கு லாயக்கற்றவர்கள் என்று கூறிவிட வில்லை—கூறவும் மாட்டேன்.

இப்போது நம் முன் பல போராட்டங்கள் வந்து விட்டிருக்கின்றன. அவைகளில் கலந்து வெற்றிமுரசு கொட்டப் போகிறோம். என்பது உறுதி!

சித்தூர் மாவட்டத்தை தமிழகத்துடன் சேர்ப்பதற்கான, திருத்தணி போராட்டம் நடைபெறுகிறது. அதிலே நமது கழக வீரர்கள் பங்கு கொண்டு தமது காணிக்கையை செலுத்தி வருகின்றனர். பலர் சிறை புகுந்திருக்கிறார்கள்—மேலும் சிறை புகத் தோழர்கள் தயாராக உள்ளனர்.

லால்குடி மாநாட்டில் நாம் தீர்மானித்தபடி, டால்மியாபுரம் போராட்டம் பற்றிய சூழ்நிலை வளர்ந்து விட்டது.

தோழர் கருணாநிதி அவர்கள் அந்த வட்டத்திலே தமது சுற்றுப் பிரயாணத்தை மிகவும் வெற்றிகரமாக முடித்துக்கொண்டு திரும்பியிருக்கிறார்.

ஆட்சியாளர் நமது வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து, வடநாட்டு முதலாளியின் பெயரால் அமைந்த 'டால்மியாபுரம்' என்ற அவமானச் சின்னத்தை 'கல்லக்குடி' என்று தாங்களாகவே மாற்றிவிட்டால், நமக்கு வேலையின்றியே வெற்றி கிட்டும். இன்றேல் நாம் அரக்கோணம் பொதுக் குழுவில் எடுத்த முடிவின் படி ஜூலை 15-ல், டால்மியாபுரம் போராட்டத்தைத் துவக்கப் போகிறோம்.

அதிலே தலைமை தாங்கி நடத்த, அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டத்தைத் தாங்க, தம்பி கருணாநிதி

தயாராக இருக்கிறார். ஆர்வமிக்க தோழர்கள் அதிலே கலந்து பணி புரிய நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

இம்முறை 'டால்மியாபுரம்' என்ற எழுத்துக்களை, நாம் இந்தி எழுத்துக்களை அழித்தது போன்று அழிக்கப்போவதில்லை.

அதற்குப் பதிலாக, 'கல்லக்குடி' என்று அச்சடித்த தாள்களை 'டால்மியாபுரம்', என்ற அவமானச் சின்னத்தை மறைத்து, அதன் மீது ஒட்டப்போகிறோம்.

ஆம், ஒட்டுப்போர் நடைபெறும், ஜுலை, 15லிருந்து.

ஒட்டுவோம், 'கல்லக்குடி' என்று 'டால்மியாபுரம் மீது. தடுத்தால், சிறை புகுவோம். அடித்தால் பெற்றுக்கொண்டு தாங்குவோம். ஆனல்....? போராட்டம் நிற்காது. தொடரும்.

தோழர்கள் ஒட்டிக்கொண்டே இருப்பர்—கைதாக, கைதாக மேலும் தொண்டர் படை வந்துகொண்டே இருக்கும்.

ஒட்டிய தாள்களைக் கிழிக்கலாம், ஆட்சியாளர்கள். கிழித்தால், மீண்டும் ஒட்டுவோம். மீண்டும் கிழிக்கட்டும், மீண்டும் ஒட்டுவோம், ஒட்ட ஒட்டக் கிழிக்கட்டும், கிழிக்கக் கிழிக்க ஒட்டுவோம், ஒட்டிக்கொண்டே இருப்போம்.

இம்முறையிலே டால்மியாபுரம் போராட்டம் ஆரம்பமாக இருக்கிறது. அதில் தோழர்கள் கலந்து கொள்ளவேண்டும்.

அதுபோலவே, கோலை ஏந்தியிருக்கும் ஆச்சாரியாரின் புதிய கல்வித்திட்டத்தை எதிர்த்து நாடெங்கும் ஜூன் 21-ல் கண்டனக் கூட்டங்கள் கூட்டி நமது எதிர்ப்பைத் தெரிவித்தோம்.

அடுத்து ஜூலை 8-ல், ஊர்வலங்கள் கூட்டி, நமது கழக ஆதரவுபெற்று வெற்றி பெற்ற சட்டசபை உறுப்பினர்களைச் சந்தித்து, அவர்களைச் சட்டசபையில் இக்கல்வித் திட்டத்தை எதிர்க்கும்படி வேண்டுகோள் ஓலையைத் தருவோம்.

கடைசியாக, இதற்கான நேரடிப் போராட்டம் தொடங்கவும் நாம் தயாராக வேண்டிய சூழ்நிலைக்கு வந்துவிட்டோம்.

ஆச்சாரியாரின் ஆபத்தான, வர்ணாஸ்ரமக் கல்வித் திட்டத்தை ஒழிப்பதற்கான கிளர்ச்சி ஜூலையில் சட்டசபை ஆரம்பமாகும் நாளன்று துவக்கப்படும். அதனை வெற்றிகரமாக நடத்தித்தரும் பொறுப்பைத் தம்பி சம்பத்திடம் ஒப்படைக்க இருக்கிறேன்.

சட்டசபை ஆரம்பமாகும் நாளன்று, காலையில், நாற்பது, ஐம்பது தொண்டர், கழகத்தின் முன்னணி வீரர் ஒருவரின் தலைமையில் ஆச்சாரியாரின் வீட்டு வாயிலில் உட்கார்ந்தோ, படுத்தோ இருப்பர்.

சட்டசபைக்குப் போகும் ஆச்சாரியார் இரக்கமற்ற நெஞ்சினராக இருப்பின் அந்த அறப்போர் வீரர்களின் மார்பின் மீது தமது காலடிகளைப் பதித்து நடந்து போகட்டும் கவலையில்லை; கொடுமைக்காரராக இருப்பின், போலீசை விட்டு அடித்துத் தூரத்தட்டும்; அஞ்சமாட்டோம்; பச்சாதாபமுள்ளவரானால், மக்கள்

மனமறிந்து நடக்கும் மதி படைத்தவரானால் தமது பிடிவாதத்தைக் கைவிட்டு விடட்டும்.

ஆச்சாரியார் எதிலும் லேசில் சிக்கமாட்டார். பச்சைப் பாம்பைப்போல பிடிக்கு அகப்படாது நழுவி நழுவிச் செல்லுவதிலே அதிசமர்த்தர்.

இதுவரை எதிலும் சிக்காத ஆச்சாரியார், இதிலே, இக்கல்வித்திட்ட எதிர்ப்பிலே ஒருவேளை சிக்கக்கூடும் சிக்கத்தான் போகிறார்.

ஆச்சாரியார் மிகவும் விடாப்பிடியாக இந்த வர்ணாஸ்ரம, குலதர்மக் கல்வித்திட்டத்தைப் புகுத்தியே தீருவேன். நான் நினைப்பதே சட்டம்—அதனை நிறை வேற்றுகிறேன் பார் என்று வீராப்பு பேசுகிறார்.

இப்படித்தான் ஆச்சாரியார், அவரது முன்னாள் மந்திரிசபைக் காலத்திலே, கட்டாய இந்தியைத் திணித்தபோதும் கூறினார்.

'ஒரு ஈரோட்டு இராமசாமி எதிர்ப்பதற்காக இந்தியை விட்டுவிடுவேனு' என்று கொக்கரித்தார்!

என்ன ஆயிற்று நிலைமை பின்னர்! தமிழ் மொழிக்கு வந்த கேட்டைக் காக்க, கட்டாய இந்தியை எதிர்க்க, தமிழகமே திரண்டு வந்தது.

பெரியார் தலைமையிலே ஆயிரக் கணக்கானவர் இந்தியை எதிர்த்துச் சிறை புகுந்தார்கள். தாய்மார்களும் தியாகத் தீயில் குதித்து தங்கள் குழந்தைகளுடன் சிறை புகுந்தனர்.

சிறை புகுந்த தாய்மார்களைப் பார்த்து வீட்டிலே குழந்தைக்குப் பாலின்றி வந்தார்கள் என்று கேலி பேசினார்.

சிறைப்பட்டு, பின்னர் செத்த தாளமுத்து—நடராசன் ஆகியோர் கல்வியறிவற்றவர், ஏழைகள் என்று ஏளனம் செய்தார்.

தள்ளாத வயதடைந்த தந்தை பெரியாரை வேகாத வெயில் காயும் பெல்லாரி சிறைக்கு அனுப்பினார். கேட்டதற்கு, அந்த இடம்தான் உடம்புக்கு மிகவும் நல்லது என்று கிண்டலாகப் பதிலளித்தார்.

இத்தனைக்குப் பிறகும் இந்திப் போர்க்களத்தில் குதித்த தமிழர் பெரும் படையைக் கண்டு மருண்ட ஆச்சாரியார், "ஏதோ நாலு எழுத்து படிக்கச் சொன்னால் அதற்கு இத்தனை எதிர்ப்பா? புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல எதிர்ப்பு கிளம்புகிறதே—இப்படி வரும் என்று தெரிந்திருந்தால் இந்தியை நுழைத்திருக்கவேமாட்டேன்" என்று கூறிக் குறைபட்டுக் கொள்ளும் நிலைமை உண்டானதை அதற்குள் மறந்திருக்கமாட்டார்—மீண்டும் நினைவுமூட்டுகிறேன்.

'புற்றீசல்' என்றதும் எனக்கு ஒரு பழைய சுவையான சம்பவம் நினைவிற்கு வருகிறது.

கடந்த முதன்முறை நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் பெரியார் அவர்கள், இந்தியை எதிர்த்து மக்கள் புற்றிலிருந்து கிளம்பும் ஈசல்களைப்போல தொடர்ந்து கிளம்பி எதிர்க்கவேண்டும் என்று எழுதியிருந்தார்.

அப்போது நான் சென்னை பிராட்வே வழியாகப் போய்க்கொண் டிருந்தேன். எதிரே, நண்பர் ஜீவானந்தம் வந்துகொண் டிருந்தார். அவர் என் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தி, 'என்னப்பா பெரியார் இப்படி எழுதியிருக்கிறார்—புற்றீசல் போலவா மக்கள் கிளம்பி எதிர்ப்பர்?' என்று கேட்டுச் சென்றார்.

சில நாட்களுக்குப் பின்னர், இந்தி எதிர்ப்பு மிகவும் பெரிதாக வளர்ந்து, ஆச்சாரியாரே, 'புற்றீசல்' போலவன்றோ மக்கள் கிளம்பி எதிர்க்கிறார்கள் என்று சலித்துக்கொண்ட பின்னர் ஒருநாள் அதே பிராட்வே வழியாக நான் போய்க்கொண் டிருந்தேன். நண்பர் ஜீவானந்தம் எதிரில் வருவதைக் கண்டு, அவரை நானே பிடித்து நிறுத்தி, 'என்ன, அன்று புற்றீசல் போலவா மக்கள் கிளம்புவர்' என்று கேட்டீர்களே! ஆச்சாரியார் கூறுவதைக் கேட்டீர்களா?' என்று கேட்க, அவர் 'ஆமாம்' என்று கூறிச்சென்ற காட்சி - சம்பவம் நினைவிற்கு வருகிறது.

அதுபோல இன்னும் மக்கள் தங்களது வருங்கால சமுதாயத்தின் நல்வாழ்வைப் பறிக்கும், நாசம் விளைவிக்கும், புதிய வர்ணஸ்ரமக் கல்வித் திட்டத்தை எதிர்க்கத் திரண்டெழுவர் என்பது திண்ணம்.

'போர், போர்' என்று கேட்ட நண்பர்களே! போருக்குமேல் போர் மூளுகிறது. வேலைக்குமேல் வேலை வளருகிறது. பொறுப்பு மிகமிக அதிகமாகிறது. உங்கள் கடமையை பொறுப்போடு, கட்டுப்பாடுடன் செய்ய வாரீர் என்று அழைக்கிறேன்.

களம்கண்டு பயப்படுபவர்களல்ல நாம்! களம்பல கண்டவர்கள்தான். போர் முனை அறியாதவர்களுமல்ல; பட்டாளமில்லாதவர்களுமல்ல. ஆனால் நாம் களத்திலே கட்டுப்பாடுடனும், கண்ணியத்துடனும் அறப்போர் செய்தல் வேண்டும் என்பதை மீண்டும் நினைவூட்டாம லிருக்க முடியவில்லை.

ஆகவே, களம்புகவேண்டிய அவசியம் நேரிடும் போது தி. மு. க. முன் நிற்கும்—அதுபோலவே, கழக வளர்ச்சிக்கான ஆக்க வேலைகளையும் தளராது செய்து வரும்.

நம்முடைய பிரச்சாரம் மிகவும் அதிகம் என்றும், நல்ல பலன் அளித்துவிட்டது என்றும், அதைக்கண்டு மாற்றார் 'பேச்சுக்கச்சேரி' என்று பொறாமையால், பொச்சரிப்பால் — கேலிபேசும் அளவுக்கு வளர்ந்து விட்டது என்றும் தோழர்கள் குறிப்பிட்டார்கள். மகிழ்ச்சிதான். அதே நேரத்தில் நாம் செய்யாத வேலை கள், புகாத இடங்கள் ஏராளம் என்பதையும் நினைவூட்டு கிறேன்.

நம்மில் தனி மனிதர்களை எடுத்துக்கொண்டால், மிக அதிகமான, அளவுக்கு அதிகமான பிரச் சாரப் பணி புரிந்திருக்கிறோம் என்பது மறுக்க முடியாத உண்மைதான். பேசிய கூட்டங்கள், கேட்ட மக்கள், அடைந்த பலன்—பயன் அதிகம்தான். ஆனால் நாம் புகாத—போகாத இடங்கள் இன்னும் எவ்வளவு என்பதை யெண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

நாம் ஆழ உழுதிருக்கிறோம் — பரவலாக உழ வில்லை. நாம் உழாத — போகாத — பேசாத — நமது

இயக்கம் பரவாத இடங்கள் அநேகம் — ஏராளமாக உள்ளன. அங்கெங்கெல்லாம் இனி சென்று பிரச்சாரம் செய்தாக வேண்டும்—பரவலாக உழவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நான், நாளைய தினம் பாகநேரி என்னும் ஊர் செல்கிறேன்—இந்தப் பதினைந்து ஆண்டுகளாக நான் அந்தப் பக்கம் போனதே இல்லை; நமது கழகப் பிரச்சாரமும் பரவாத இடம் பாகநேரி.

இப்படிப்பட்ட பாகநேரிகளிலெல்லாம் நமது பிரச்சாரம் பரவச் செய்ய வேண்டும். பட்டி, தொட்டி எங்கும் சுற்றிவந்து நமது கழகக் கொள்கைகளை மக்களிடையே பரப்பவேண்டும்.

நமது கழகத் தோழர்களிடையே இதற்கான திறமை மிகவும் இருக்கிறது என்பதை நன்றாக அறிவேன்.

'சென்றேன், கண்டேன், வென்றேன்' என்று பெருமிதத்துடன் ஜூலியஸ் சீசர் சொன்னானாம் தனது திக்விஜயம் பற்றி! எனது தம்பிமார்கள், சென்றேன் - சொன்னேன்—வென்றேன் என்று கூறக் கூடியவர்கள்.

அதற்கான உடல் உரமும், உள்ளப் பண்பும், கருத்து வளமும், எண்ணத் தெளிவும் மிக்கவர்கள் அவர்கள் என்பதால்தான், அவர்களை நமது கழகம் புகாத, பரவாத புதுப்புது இடங்களுக்கெல்லாம் சென்று, பிரச்சாரத்தில் மேலும் அதிகமாக ஈடுபடக் கேட்டுக் கொள்கிறேன்.

'நம் நாடு' பத்திரிகை பொறுப்பில் இருப்பதால் — குறைந்தது ஓராண்டுக்காவது அதனை நான் முன்நின்று கட்டிக் காக்கவேண்டிய கடமை இருப்பதால், நான் அதிகமாக சுற்றுப் பயணம் செய்வதற்கில்லை — அப்படிச் செய்தால், உடனிருந்து கவனித்துத் தாய்ப்பாலூட்டாத குழந்தையைப் போல 'நம் நாடு' வாடலாம், சொந்தக்காரன் கவனியாத வயலைப்போலக் காய்ந்து விடலாம்,'' என்று கருதுகிறேன்.

எனவேதான் மற்றவர்கள் முன்பு செய்ததைவிட சற்று அதிகமாகவே பிரசாரத்தில்—புதுப்புது இடங்களுக்குச் சென்று—ஈடுபடவேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரு விஷயம் இந்த இரண்டு நாள் மாநாடும், இங்கே தோழர் ஆசைத்தம்பி அவர்கள் தேர்தலில் நிற்பதால், தேர்தலுக்குப் படை திரட்டவே நடத்தப்படுகிறது என்று மாற்றுக் கட்சியினர் எண்ணிக் கொண்டிருந்திருப்பார்கள். நாம் தேர்தல் காரியத்தை எவ்வளவு துச்சமாக மதிக்கிறோம் என்பதை மாநாடு நன்கு விளக்கி இருக்கும்.

தேர்தலைப் பற்றி, இருநாட்களில் யாரும் பேசவுமில்லை—அதற்கான பரபரப்பும் இல்லை. ஏன்?

திராவிட முன்னேற்றக் கழகம் அடிப்படைப் பிரச்சினையிலேதான் அதிகமான அக்கரை காட்டுவது- அடிப்படைப் பிரச்சினை திராவிடநாடு திராவிடருக்கே! என்பதுதான். அதற்குத் தேர்தல் பயன்பட்டால், பயன்படும் சூழ்நிலை ஏற்பட்டால், தக்க வழி, வகை,

முறைகளை வகுத்துக் கொண்டு, தேர்தலில் தி. மு. க. அக்கரை காட்டும், நிச்சயமாக.

இத்தேர்தலைப் பற்றித் தனியாக ஒரு அறிக்கை, இம்மாவட்ட தி. மு. க. வையும், ஆசைத்தம்பி அவர்களையும் கலந்து வெளியிடுவேன்.

எனவே தோழர்களே, நமது அடிப்படைப் பிரச்சனைக்கான முயற்சிகள் வெற்றிதர வல்லன என்ற நம்பிக்கை எங்கும் தெரிகிறது. திராவிட நாடு திராவிடருக்கே என்ற பிரச்சினை எங்கும் பேசப்படுகிறது. நாடு விழிப்புற்று இருக்கிறது, நல்ல சமயம் நண்பர்களே! நல்ல சமயம்!! நமது பணியை மேலும் திறம்படச் செய்வோம் வாரீர்! வாரீர் என்று அழைக்கிறேன்.

போராட்டத்திற்குமேல் போராட்டங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. ஆக்க வேலைகளை வேறு கவனித்தாக வேண்டும். இவை யாவற்றையும் கவனிக்க, சமாளிக்க நம்மிடம் நல்ல படைபலம், திறமை யாவும் இருக்கிறது. நமது நாடியேபில முறுக்கேறியிருக்கிறது; நெஞ்சிலே வீரம் கொப்பளிக்கிறது; கண்களிலே வெற்றிக்குறி காணப்படுகிறது; நாம் நமது வெற்றி முரசு கொட்டுவோம் வாரீர், வாரீர், இதற்கான வெற்றிப் பாதையும், வீரவுணர்ச்சியும் இந்த விருதை மாநாடு அளித்திருக்கிறது என்று கூறி இம்மாநாடுகளைச் சிறப்புற நடத்திய தோழர் அனைவருக்கும் நன்றிகூறி. மீண்டும் அழைக்கிறேன் வாரீர், வாரீர், கொட்டுவோம் 'வெற்றி முரசு.'

# தோழர். எம். எஸ். சிவசாமி திறப்புரை

அன்புள்ள அண்ணா அவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இராமநாதபுரம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக 2-வது அரசியல் மாநாட்டைத் திறந்து வைக்கும் பெரும் பணியை எனக்களித்த இந்த மாநாட்டு வரவேற்புக் குழுவினருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய கொள்கை—நோக்கம், இந்த நாடு—சென்னை மாகாணம், தென்னாடு, திராவிட நாடு, திராவிடருக்காகவே தனி நாடாகவேண்டும் என்பதுதான்.

திராவிடநாடு ஒரே இந்தியாவுடன் இணைந்திருப்பதால், வடக்கு—வடநாடு வளருகிறது, தெற்கு—திராவிட நாடு தேய்கிறது, பொருளாதாரம், அரசியல் அதிகாரம் ஆகிய எல்லா துறைகளிலும் என்பது நன்கு தெரிகிறது.

இந்த இந்திய உபகண்டம் வெள்ளையனிடமிருந்து விடுபட்டு சுதந்திரம் அடைந்து ஆறு ஆண்டுகள் ஆகின்றன! இந்த ஆறு ஆண்டு காலத்தில் நாம் அடைந்த நன்மை ஏதுமில்லை! குறிப்பிட்டுக் கூறுமளவிற்கு எதுவுமே இல்லை!

இந்த ஆறு ஆண்டு காலத்தில் வடநாட்டில் ஒரு பெரிய பொருளாதாரக் கோபுரமே எழும்பிவிட்டது. வட

நாடு செல்வம் கொழிக்கும் சீமையாகிவிட்டது. ஆனால் தென்னாடு, திராவிடநாடு சீரழிந்துகொண்டே வருகிறது.

வடநாடு தென்னாட்டை, திராவிட நாட்டை, திராவிட நாட்டின் செல்வத்தைச் சூறையாடிக்கொண்டிருக்கிறது. வடவர் கையில் மத்திய அரசியல் அதிகாரமிருப்பதால், அதை எவ்வளவு அதிகமாகப் பிரயோகிக்க முடியுமோ, அவ்வளவு அதிகமாகப் பிரயோகித்து, நமது திராவிடத்தைச் சுரண்டி சுடுகாடாக்கிக்கொண்டு வருகிறார்கள்!

தற்போது காங்கிரஸ்காரர்களால் மிகவும் பெருமையோடு பேசப்பட்டு வரும், ஆட்சியாளரின் ஐந்தாண்டு திட்டத்தை அலசிப்பார்த்தால், வடவரின் ஓரவஞ்சனை மிகவும் நன்றாகத் தெரிகிறது.

இந்த ஐந்தாண்டு திட்டத்தின்படி நீர்ப்பாசன வேலைகளுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் பலகோடி ரூபாய்களில், தென்னாட்டிற்கென ஒதுக்கியிருப்பது மிகச் சில கோடிகள்தான். மணிமுத்தாறு, கீழ்பவானி முதலிய அணைக்கட்டு திட்டங்கள்தான் ஆரம்பிக்கப்பட்டு அவையும் முடிக்கப் போதிய பணமில்லையென்று அரைகுறையாக விளங்குகின்றன!

இதே நேரத்தில், வடக்கே நர்மதா, தபதி, கோசி, இராகுட், தாமோதர் போன்ற மாபெரும் அணைத்திட்டங்கள், மிகப் பெரிய அளவில், பலபல கோடி ரூபாய் செலவழித்து முழுமூச்சாக நடைபெறுகின்றன!

இதை நினைத்துப்பார்க்கும்பொழுது நாம் எவ்வளவு தூரம் அலட்சியப்படுத்தப்படுகிறோம் என்பது தெளிவாகவில்லையா? இங்கே மக்கள் பசி, பட்டினி என்று

கதறி துடித்து அழுவதை எண்ணிப் பார்க்கும்போது நெஞ்சம் குமுறுகிறதே!

விவசாய அபிவிருத்தி திட்டங்கள் வடநாட்டில் மிகவும் அதிகமாகவுள்ளன! அதுமட்டுமல்ல, தொழிற் சாலை அபிவிருத்தி திட்டங்களும் வடநாட்டிலேதான் மிகமிக அதிகமாக நடைபெறுகின்றன!

சிந்திரியில் உர உற்பத்திச்சாலை, சித்தரஞ்சனில் இரும்புத் தொழிற்சாலை, பம்பாயில் பென்சிலின் உற்பத்திசாலை, அலிகாரில் தபால்தலை செய்தல், நாக்பூரில் வெடிமருந்து உற்பத்தி, அலிப்பூரில் நாணய உற்பத்தி, மாண்டுவில் தந்தி டெலிபோன் கருவிகள் செய்தல் என்று வடநாட்டிலேதான் முக்கிய தொழில் அபிவிருத்தி திட்டங்கள் யாவும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே தொழில் வளம் பெற்று, பொருளா தாரத் துறையில் மிகவும் முன்னேறியுள்ள வடநாட்டை மேலும்மேலும் வளப்படுத்திவருகிறார்கள். தென்னாட்டை தொழில் வளம் குன்றச்செய்து, வடவரின் வாணிபத் திற்கு வேட்டைக்காடாகவே விளங்க வைக்கிறார்கள்.

இத்தொழிலபிவிருத்தி திட்டங்களினால் வடநாடு தானே நல்ல பயனை அடையமுடியும்? வடநாட்டில் தானே தொழிற் பஞ்சம் நீங்க முடியும்? தென்னாட்டிற்கு என்ன பலன் இருக்க முடியும்?

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, மற்றொரு விசித்திர வேலையும் இந்த நேரு சர்க்கார் செய்திருக் கிறது. இது மிகவும் வேதனையான செய்தியாகும்.

அரிசியை முக்கிய உணவாகக் கொண்டவர்கள் தென்னாட்டவர்கள்தான். ஆகவே அரிசி பற்றிய

எத்தகைய திட்டம் தீட்டினாலும் அது தென்னாட்டை எட்டிய பிரச்சினையாகத்தானே இருக்கவேண்டும்? தென்னாட்டில்தானே அரிசிபற்றிய ஆராய்ச்சி சாலையும் அமைக்கப்படவேண்டும்?

ஆனால், இந்த நேரு சர்க்கார் அரிசி ஆராய்ச்சி சாலையை, கோதுமையை முக்கிய உணவாகக்கொண்ட வடநாட்டிலே ஆரம்பித்திருக்கிறார்கள். வேடிக்கையா? வேண்டுமென்றே செய்கின்ற ஓரவஞ்சனை வேலையா? எண்ணிப்பார்க்க வேண்டாமா, நாம்?

இதுமட்டுமா? இதேபோல்தான் அரக்குத் தொழில் ஆராய்ச்சிசாலை. இந்தியாவில் கிடைக்கும் அரக்கில் மூன்றிலொரு பங்கு மைசூர் பகுதியில் மட்டும் கிடைக்கிறது. அங்கே அமைக்கப்பட வேண்டிய அரக்கு ஆராய்ச்சிக்கூடம், வடநாட்டிலே, நாஞ்சியில் ஆரம்பிக்கப்படுகிறது.

இதேபோல், உருளைக்கிழங்கு அதிகம் கிடைக்கும் நீலகிரி பகுதியைவிட்டு, வடநாட்டில் பூனாவிலே உருளைக் கிழங்கு பற்றிய ஆராய்ச்சி மில்!

கப்பல் கட்டும் தொழிலபிவிருத்திக்காக பூனா தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிறது. அங்கே ஒரு செயற்கைக் கடல் உண்டாக்கப்பட்டு வருகிறதாம், இதற்காக! ஏன் பணம் இப்படி பாழாக்கப்பட்டு வடநாட்டிலேயே இதனை அமைக்கவேண்டும்? தெற்கே, இயற்கையாக, குளம்போல், ஒருசிறிதும் அலையில்லாத கடற்பகுதி வாய்ந்த தூத்துக்குடியில் யாதொரு செலவுமின்றி அமைக்கக்கூடாதா? ஏன், எல்லாம் வடநாட்டிலேயே, அமைக்கப்படவேண்டும்? யோசிக்கவேண்டாமா, ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று!

காடுகள் பற்றிய ஆராய்ச்சி நிலையமும் வடநாட்டில் தான். ஏதாவது பொருத்தம் இருக்கிறதா? தென்னாட்டில் தானே அதற்குத் தக்க இடம் இருக்கிறது. வடநாட்டுக் காடுகளில் கிடைக்கும் மரங்கள் அடுப்பெரிக்கத்தானே உதவும்; ஆராய்ச்சிக்குப் பயன்படாதே! தென்னாட்டில் பரவிக்கிடக்கும் கிழக்குத் தொடர்ச்சி, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள காடுகளில்தான் மூலிகை சத்துள்ள மரங்களும், சந்தனம், தேக்கு முதலிய மரங்களும் கிடைக்கின்றன! லவங்கம், ஏலக்காய் போன்ற வாசனை திரவியங்களும், சாதிக்காய் போன்ற மருந்து வகைகளும் பயிராவது தென்னாட்டு காட்டுப் பகுதிகளில்தானே! இதைவிட்டு வடநாட்டில் காடுகள் பற்றிய ஆராய்ச்சி சாலை அமைப்பது எதனால்?

எல்லாம் வடநாட்டை வளப்படுத்தி, தென்னாட்டைச் சுரண்டும் சூதான திட்டமாகத்தானே இருக்கின்றன?

இவ்வளவு வெளிப் படையாகவே வடநாடு திட்டமிட்டு வேலை செய்து வருகிறது. வளரும் வடக்கு! தேயும் தெற்கு! இந்த நிலைமாற வேண்டும், மாற்றப் பட வேண்டும்.

இத்தகைய வடநாட்டுச் சுரண்டலுக்கு, இன்றைய ஆட்சிப் பொறுப்பிலே வீற்றிருக்கும் ஆச்சாரியார் போன்றவர்கள் அடிபணிந்து, திராவிடத்தை மேலும் சீரழிய வைக்கிறார்கள்.

ஏற்கனவே சீரழிந்து கிடக்கும் திராவிட சமுதாயத்தை மேலும் சீர் குலைத்திட ஆச்சாரியார் தம்முடைய புதிய வர்ணாஸ்ரமக் கல்வித் திட்டத்தைப் புகுத்துகிறார். அதனை நாம் எதிர்த்து, ஒழித்தாக வேண்டும்.

திராவிடர் சமுதாயம், வருங்கால வாலிப சமுதாயம் வகை கெட்ட சமுதாய மாக்கப்பட, ஆச்சாரியாரின்,

சூதான திட்டத்தை, கல்வித் திட்டத்தை உடைத்தெறிந்து நமது மக்களின் வாழ்வுக்கேற்ற வகையான கல்வித் திட்டத்தைக் கொண்டு வரும்படி செய்தாக வேண்டும்.

இக்கல்வித் திட்டத்தை ஒழிக்கா விட்டால், நமது வருங்கால சமுதாயம் நம்மைப் பழிக்கும், தூற்றும், கடமையை மறந்தவர்கள் என்று குறை கூறும். எனவே, முதல் போராட்டமாக, கல்வித்திட்ட எதிர்ப்பே நடைபெற வேண்டும். இதற்கான திட்டங்களை அண்ணா தீட்டித்தர வேண்டுகிறேன். அதன்படி நடக்க, செயலாற்ற, போர்க்களம் புக திராவிடர்கள் தயார் என்றும் கூறுகிறேன்.

இறுதியாக திராவிட மக்கள் கட்டுப்பாடுடன் நடக்க வேண்டிக் கொள்கிறேன். தனி மனிதரிடம் பூரா உணர்ச்சி கொண்டு, நாம் நமது கூட்டுப் பொறுப்பை மறந்து, கடமையை கைநழுவவிடக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நமது பொதுச் செயலாளர், அறிஞர் அண்ணா வகுத்துத் தரும் போராட்டத்திலே நாம் கலந்து, கட்டுப்பாட்டுடன் நடந்து, நமக்காக, நமது திராவிட நாட்டின் நலனுக்காக, எல்லாவிதமான தியாகத்தையும் செய்ய முன்வர வேண்டும், நம்மை நாமே பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நமது இலட்சியம் நிறைவேற நாம் செய்யும் எந்தக் காரியமும் ஒழுங்காக நடைபெற முடியும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்.

இம்மாநாட்டைத் திறந்து வைக்கும் பணியை எனக்களித்தமைக்கு மீண்டும் நன்றிகூறி, இம்மாநாட்டைத் திறந்து வைக்கிறேன்.

வரவேற்புத் தலைவர் தோழர்

# சிவசண்முகசுந்தரம் பேச்சு

பெரியோர்களே! அண்ணா அவர்களே!! தாய்மார்களே!!! வணக்கம்.

நமது இராமநாதபுர மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநாட்டிற்கு வருகை தந்த யாவரையும் மிக மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

இத்தகைய வாய்ப்பை எனக்களித்த மாவட்ட பொதுக் குழுவினருக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற காலத்தில் கல்லடியும், சொல்லடியும்பட்டு, ஆச்சாரியாரின் அடக்கு முறைக்கு ஆளாகினோம். ஆசிரியர் வேலாயுதம், கே. எஸ். பாண்டியன், மஜீத் போன்றவர்களைப் பறி கொடுத்தோம்.

அந்த நாளிலும் மாற்றுக் கட்சியினரைப் போல் வெறிச் செயல்களிலே ஈடுபடாமல், பொறுமையாக நமது இலட்சியங்களை மக்கள் முன் வைத்து பணியாற்றி வந்திருக்கிறோம்.

நாட்டுப் பிரிவினை அவசிய மென்பதை மக்கள், ஏன், மாற்றுக் கட்சியினரும் இன்று உணரும் நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

எக்கட்சியினர் ஆட்சிப்பீட மேறினும் நாடு பிரிந்தாலல்லது நமக்கு நல்வாழ்வு கிடையாது என்பதை உணர்த்த வேண்டும்.

திராவிட நாடு பெறமுடியாது — பெற்றால் அது வாழமுடியாது என சிலர் கூறுகிறார்கள். ஆனால் என்

பெற முடியாது — வாழமுடியாது என்பதற்குக் காரணம் கூறி விளக்கியதில்லை. அதே நேரத்தில் நாம் பல ஏடுகளிலும், மேடைகளிலும் தனிநாடு பெற முடியும் — பெற்றால் நலமாக வாழமுடியும் என்பதை விளக்கி வந்துள்ளோம்.

உலக வரலாற்றைப் புரட்டிப் பார்ப்போமானல், இனத்தின் அடிப்படையிலேயே நாடுகள் அமைந்திருப்பதைக் காணமுடியும்.

ஒரே மொழி பேசும், பிரிட்டனிலே, அயர்லாந்துதான் தனி இனமெனக் கூறி, இங்கிலாந்திலிருந்து பிரிந்து தனியாட்சி செலுத்துகிறது.

அப்படியிருக்க, பழம்பெரும் இனமான நம் திராவிட இனம், தனது சொந்தக்கலை, கலாச்சாரம், நாகரிகப் பண்பாடுகளை இதுவரை எந்த ஒரு பிற இன, கலை—கலாச்சார — நாகரீகப் பண்பாடுகளின் மோதுதலுக்கும் பலி யாக்காமல் கட்டிக் காத்து வருகிறது. அப்பேர்ப்பட்ட ஒரு மாபெரும் இனம், தனக்கென தனிநாடு கேட்பதில் என்ன தவறு காண முடியும்!

வடநாட்டுத் தொடர்பை அறுத்துத்தான் ஆக வேண்டும் என்ற முடிவுடன், அதற்கான போராட்டத்திற்கு நமது சக்திகளை முழு மூச்சாகத் திரட்டிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் நமது மாநில முதலமைச்சர், இராஜகோபாலாச்சாரியார் தமது மூன்று மணி நேர கல்வித் திட்டத்தின் மூலம் திராவிட சமுதாயத்தின் மீது புதியதொரு தாக்குதலைத் தொடங்கி யிருக்கிருர்.

'யார் எதிர்த்த போதிலும் திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன்,' எனக் கொக்கரிக்கிருர், தோழர் ஆச்சாரியார்.

அவரது கொட்டத்தை அடக்க நமது போராட்டத்தை எந்த முறையில் விரிவு படுத்துவதென ஆலோசித்து, சிறந்ததொரு முடிவுக்கு வரவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

இதே நேரத்தில், வடநாட்டுப் பனியாவின் பெயரால், தென்னாட்டின் அவமானச் சின்னமாக விளங்கும் டால்மியாபுரமென்ற பெயரை கல்லக்குடி என மாற்றவேண்டுமென்ற நமது போராட்டத்தையும் கவனிக்கவேண்டியிருக்கிறது. அப்போராட்டத்தில் முழு வெற்றி கிடைக்கும் வரை ஓயமாட்டோம் என்ற குறிக்கோளை இன்று நாம் எடுத்துக் கொள்ளுவோம்.

இதுவரை நம் தோழர்கள் போராட வாய்ப்பில்லையே என குறைபட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது இரு மாபெரும் போராட்டங்கள் நம் முன் நிற்கின்றன.

ஆட்சியாளர் போக்கினைப் பார்த்தால் இன்னும் பல போராட்டங்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டு தான் இருக்கும்போல் தெரிகிறது.

இப்போராட்டங்களை யெல்லாம் நமது தோழர்கள் கட்டுப்பாடாக, உணர்ச்சி வசப்படாமல், பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் அறிவிக்கும் முறைக்கு சிறிதும் மாறுதலற்ற முறையில் நடத்தவேண்டுமென்பதை உங்களுக்கு வற்புறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

இப்போராட்டங்களையெல்லாம் நமக்குக் கிடைக்கக் கூடிய பயிர்சியாகக் கருதி அண்ணா அவர்கள் அறிவித்தபடி, 1960-க்குள் திராவிட நாட்டைப் பெறுவதற்கான இறுதிப் போராட்டத்திற்கு நாம் தயாராக உங்களை அறைகூவி அழைக்கிறேன்.

மீண்டும் யாவரையும் வணங்கி வரவேற்கிறேன்.

# தோழர் என். எஸ். இளங்கோ
# தலைமையுரை

இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. இரண்டாவது அரசியல் மாநாட்டின் பிரதிநிதிகளே! அறிஞர் அண்ணா அவர்களே! வணக்கம்.

இந்த மாநாடு மிகவும் நெருக்கடியான கட்டத்தில் கூடியிருக்கிறது. இந்த நிலையில் மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் பொறுப்பு மிக்க பணியை எனக்களித்த இந்த மாவட்டத் தோழர்களுக்கு எனது நன்றி.

இதுபோன்ற மாநாடுகளுக்கு என் போன்ற இளைஞர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பது வளர்ந்து வரும் நமது இயக்கத்தின் முழு ஜனநாயகப் பண்பை எடுத்துக் காட்டுகிறது.

எனக்குத் தரும் பெருமை இயக்கத்திற்குத் தரும் பெருமை; ஆர்வமிக்க என் போன்ற தொண்டர்களுக்கு அளிப்பு வாய்ப்பு ஆகும்.

1938-ல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்திலே, அறிஞர் அண்ணா அவர்களின் சூறுவளிப் பேச்சுக்களைக் கேட்டு, இயக்கத்தில் சேர்ந்தவன், நான். நான் முதன் முதல் பேசிய முதல் கூட்டம்—எனது முதல் மேடை அமைந்தது இங்கேதான்.

இதே விருதுநகரில் தான் எனது முதல் பேச்சு—என்பதையும், இங்கே இன்று கூடும் இந்த மாநாட்டிற்கு நான் தலைமை தாங்குவதையும் எண்ணிப் பார்க்கும்போது நான் உண்மையிலேயே பூரிப்படைகிறேன்.

கடந்த ஏழு அல்லது எட்டு ஆண்டு காலத்திற்குமுன் நமது இயக்கம்—ஜஸ்டிஸ் கட்சி, மிட்டா, மிராசுகளின் கையிலே கிடந்தது. ஜரிகைக்குல்லாய்களே நடமாடினர், கட்சியில். பணக்காரர்களின் ஆதிக்கம் மிகுந்து, பட்டம் பதவிப் பித்தர்களின் எடுபிடியாக, விளங்கி வந்த கட்சியை, சேலத்தில் கூடி, மக்கள் கட்சியாக—திராவிடர் கழகமாக மாற்றி யமைத்தோம்.

சேலத்திற்குப் பின்னர்—நாம் நம்மிடையே ஏற்பட்ட சில சந்தர்ப்பக் கோளாறுகளால், நமது தலைவரிடமிருந்து பிரிந்து—திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்தோம்.

1949-ல் ஏற்பட்ட இந்த இளைஞர் பாசறை—தி. மு. க. மிகவும் வேகமாக வளர்ந்துள்ளது. உலகத்தில் இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தனை பெரிய சக்தி வாய்ந்த இயக்கம் எதுவுமே உருவானதில்லை யென்ற அளவுக்கு நாம் வளர்ந்து இருக்கிறோம்.

நாம், மாற்றுக் கட்சிக்காரர்களின் பரிகாசம், அரசாங்க அடக்குமுறை ஆகிய எதையும் பொருட்படுத்தாமல், நமது உணர்ச்சி—நமது கட்டுப்பாடு—பலம், தியாகம் ஆகியவைகளைக் கொண்டே வளர்ந்தோம்—வளருகிறோம்.

கடந்த ஆண்டு நாம் நடத்திய ரயில்வே போர்டு இந்தி எழுத்து அழிப்புக் கிளர்ச்சியைக்கூடக் கேலியும் கிண்டலும் செய்தனர்.

இந்த நாட்டுக்குச் செய்யவேண்டிய மிக மிக முக்கியமான கடமைகளில் ஒன்றாக நாம் நினைத்து நடத்திய இந்தப் போராட்டத்தைப்பற்றி, இந்த நாட்டு

அரசாங்கம் மிகத் திடமான ஒரு காரணம் சொல்லி யிருக்கிறது.

இரயில்வே போர்டுகளில் இந்திப் பெயர் எழுதி யிருப்பதன் காரணம், வட நாட்டிலிருந்து தென்னாட்டிற்கு ராமேஸ்வரம் முதலிய இடங்களுக்குப் போகும் யாத்ரீகர்களுக்காகவாம்!

இந்திப் பெயரைப் படித்துக் கொண்டே செல்லும் வடநாட்டு யாத்ரீகர்களுக்கு எங்கும்—சிதம்பரம் முதலிய பெரிய நிலையங்கள் முதல்—எங்கோ மூலைகளில் கிடக்கும் சிறிய சுடுகாட்டாம்பட்டி நிலையங்களிலும் இந்திப் பெயர் முதலிடத்தில்—மேலிடத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

வட நாட்டிலிருந்து — மார்வாரிகளும் — மூல்தானிகளும்—தங்கள் அன்பு மனைவிகளுடன் சாரி சாரியாக பிள்ளைவரம் வேண்டி செல்லுகின்றனர். அவர்களுக்கு —அந்த ஒரு சிலருக்காக இத்தனை சலுகைகள்— சௌகரியங்கள்?

ஆனால் இங்கே இத்திராவிட நாட்டிலே வாழ வழியின்றி, பஞ்சையாய்—பராரியாய் அனாதையாய் தவிக்கும் ஏழைத் தொழிலாளிகள்—நெசவாளிகள் ஆகியோர் அதே ரயில் பாதையிலே—அதே போர்டுகளின் அடியில் தன் பசிக் கொடுமையால்—பிழைக்க எந்த வழியுமே இல்லாத காரணத்தால்—தன் அருமைக் குழந்தைகளை — 'அந்தக் குழந்தை எட்டணா — இது இரண்டு ரூபாய்—இது பத்துரூபாய்' என்று விலை கூறி விற்கிறானே அவனுக்காக இந்த அரசாங்கம் என்ன செய்து விட்டது? ஒன்றுமில்லை!

இந்தக் கொடுமையை நினைக்கும்போது உண்மையி லேயே நெஞ்சம் குமுறுகிறது. உடனடியாக இது போன்ற நிலைமைகளுக்கு ஒரு முடிவுகட்ட வேண்டு மென்ற துடிப்பு தோன்றுகிறது.

இத்தகைய அவசியமற்ற — நம்மையும் நமது மொழியை கேவலப் படுத்தும் முறையிலே உள்ள இந்தி எழுத்துக்களை நாம் அழிக்கும்போது இந்த அரசாங் கம் போலீசாருக்கு ஒரு இரகசியமான உத்தரவு பிறப் பித்ததாம்.

'இந்தி எழுத்தை அழிக்க ஒருவர் வந்தால் விலங்கு மாட்டிக் கைது செய்யுங்கள் — ஐந்து பத்துப் பேர்க ளாக வந்தால் அடித்து விரட்டுங்கள். ஐம்பது நூறு என்று கூட்டமாக வந்தால் ஒன்றும் செய்யாமல் விட்டு விடுங்கள்,' என்பதே அந்த உத்தரவு.

ஏன், இத்தகைய வேடிக்கையான உத்தரவு? ஆச்சாரியாரிடம் நமது அறப்போர் வீரர்களைக் கைது செய்து அடைக்கப் போதிய சிறைச்சாலைகள் கிடை யாது என்பதுதான் முக்கிய காரணம்.

இந்த நாட்டிலுள்ள மொத்த சிறைச்சாலைகளில் சுமார் முப்பதாயிரம் பேர்களைத்தான் அடைக்க முடி யும். அதில் ஏற்கனவே ஐம்பதாயிரம் பேர்களுக்கு மேல் இருக்கின்றனர். நமது படை வரிசையைக் கைது செய்து அவர்களைக் கட்டிக்காக்க இந்த அரசாங்கத்தி னிடம் இடமில்லை, வைத்துச் சோறு போடவும் வக்கோ, வழியோ, வகையோ கிடையாது.

சிறைச்சாலைகளிலிருந்து ஆண்டுதோறும் பல கைதிகள் வெளியே விடப்படுகின்றனர், குடியரசு தினத்தன்று.

சேலம் மாஜிஸ்திரேட் இதுபோன்ற சம்பவத்தின் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார்—தமது கடமையை உணர்ந்தார் போலும் அவர்.

'பொது மக்களே, குடியரசு தினத் தன்று இரண்டாயிரம் கிரிமினல் கைதிகள் வெளியே வரப்போகிறார்கள்—பத்திரம் பத்திரம், என்று எச்சரித்திருந்தார்.

இப்படியெல்லாம் கைதிகளை வைத்துக் கொண்டிருக்க முடியாமல் திண்டாடுகின்ற அரசாங்கத்தின் கொடுமையும் அடக்கு முறையும் நம்மை என்ன செய்துவிட முடியும் என்று கேட்கிறேன்.

நாம் நமது உரிமை முழக்கைத் தொடர்ந்து நடத்தி வருவோம். இறுதி போராட்டம் விரைவில் துவக்கப் படவேண்டும்.

இப்போது நாம் திருச்சி மாவட்டத்தில் தொடங்கும் 'டால்மியாபுரம் போராட்டம்' மிகவும் முக்கியமானதாகும்.

'டால்மியாபுரம்' என்பது வடநாட்டு முதலாளியான சேத் ராமகிருஷ்ண டால்மியா என்பவரது பெயரால் அழைக்கப்படும் இடமாகும்.

அதற்கு ஏற்கனவே 'கல்லக்குடி' என்று பெயர். அங்கே இந்த வடநாட்டு முதலாளி தனது சிமெண்ட் தொழிற்சாலையை அமைத்து திராவிடத்தின் வளமான மண்ணை விற்றுப் பணமாக்கி திராவிடத்தைச் சுரண்டுகிறான்.

அத்தகைய வடநாட்டாரின் பெயரால் திராவிடத்தின் 'கல்லக்குடி' அழைக்கப்படுவதா? இது திராவிடத்தின் அவமானச் சின்னமல்லவா? இதனை மாற்றுவதற்

கான போராட்டம் தான் டால்மியாபுரம் போராட்டமாகும்.

இந்த டால்மியா சாதாரண ஆளல்ல. மிகப் பெரிய முதலாளி. வடநாட்டில் டைம்ஸ் ஆப் இந்தியா (Times of India) இல்லஸ்ட்ரேடட் வீக்லி (Illustrated weekly) போன்ற பல பெரிய பத்திரிகைகளையும், பல தொழிற்சாலைகளையும் நடத்துபவர்.

இவரிடமிருந்து மட்டும் காங்கிரஸ் இயக்கம் ஒரு கோடிக்குமேல் பணம் கடனாகப் பெற்றிருக்கிறதாம்.

இத்தகைய பண முதலைகளின் ஆதரவால் வளரும் காங்கிரசும்—காங்கிரசு சர்க்காரும் சேர்ந்து, வடநாட்டு முதலாளிகள் திராவிடத்தைச் சுரண்ட பக்கபலமாக இருக்கிறார்கள்.

'டால்மியாபுரம்' என்று அழைக்கப்படும் 'கல்லக்குடி'யில் சிமெண்ட் செய்வதற்கு மிகவும் தேவையான கல்—மண்—ஜிப்சம் ஆகிய மூன்றும் ஏராளமான அளவில் கிடைக்கின்றன.

திராவிடத்தின் மண்—வளம்—செல்வம் வடநாட்டு முதலைக்கு ஏகபோகமாகப் பயன்படுவது மட்டுமல்லாமல், அந்த இடமே அந்தப் பண முதலையின் பெயரால் அழைக்கப்படுவதா? இதைக் கண்டும் நாம் நமது சுயமரியாதையை—திராவிட இன உணர்ச்சியை மறந்து சும்மா கிடப்பதா? என்று சூளுரைத்துப் போராட்டத்தில் குதித்திருக்கிறோம்.

இந்த நாட்டிற்கு அவமானச் சின்னமாக விளங்கும் இந்தப் பெயரைக் கல்லக்குடி என மாற்றவேண்டும் என ஆளவந்தாரைக் கேட்டோம்—வேண்டினோம்-

எச்சரித்தோம்—எனவே போராட்டம் தொடங்க நாம் தயாராகி விட்டோம். வெற்றிகாணும் வரை ஓயமாட்டோம் என்பது உறுதி.

TIRUNELVELI.

இதற்கு அடுத்தப்படியாக நம் முன் நிற்கும் பிரச்சினை திருத்தணிக் கிளர்ச்சி.

திருத்தணி கிளர்ச்சி பெரும் பாலோர் தமிழர்களாக உள்ள—சித்தூர் மாவட்டத் தமிழகத்தோடு சேர்க்கவேண்டு மென்பதாகும்.

சென்னை மாகாணத்தி லிருந்து, வரும் அக்டோபர் முதல் தனியாகப் பிரிகின்ற ஆந்திர மாகாணத்துடன் தமிழ்ப் பகுதிகள் சேர்க்கப்பட் டிருப்பது மிகவும் கொடுமைதான். அநீதிதான். அதற்காகப் போராடும போராட்டத்தில் நமது கழகத்தவரும் பங்குகொண்டு தங்கள் கடமையைச் செய்து வருகிறார்கள்.

கடந்த சில தினங்களில், திருத்தணிக் கிளர்ச்சியில், கைது செய்யப்பட்ட ஒன்பது பேர்களில் ஐந்து பேர் தி. மு. க. வைச் சேர்ந்தவர்கள் என்று பெருமையோடு கூறுகிறேன்.

இதிலும் நாம் வெற்றி பெறுவோம் என்பது உறுதி. அதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருவோம்.

இதற்கடுத்தபடி இன்று நமது மிக முக்கியமான போராட்டமாக ஆச்சாரியார் புதிய கல்வித் திட்ட எதிர்ப்பாகும்.

இக்கல்வித் திட்டத்தினல் நமது வருங்கால திராவிட சந்ததிகளுக்கு — வாலிபர்களுக்கு விளையும் கேடு

களைப் பற்றி நாம் நாடெங்கும் கூட்டங்கள் கூட்டி நமது கண்டனத்தை தெரிவித்திருக்கிறோம்.

அடுத்து அறிஞர் அண்ணா அவர்கள் தீட்டித் தரும் திட்டப்படி, முறையாக — கட்டுப்பாடாக நாம் இக்குல தர்மக் கல்வித் திட்டத்தை எதிர்த்து ஒரு பெரும் போர் நடத்தியாக வேண்டும்.

தென்னாட்டைப் பொறுத்தவரை, எந்தப் பிரச்சினைகளிலும் நாம்தான் போராட வேண்டியிருக்கிறது. அதற்கேற்றாற் போல் நமக்கு ஆதரவும் பெருகிக் கொண்டு வருகிறது.

திராவிட நாடு வடநாட்டு அரசியல் பிடியிலிருந்து விடுபட்டு, தனித்தியங்கினால் தான், வடநாட்டு வாணிபப் பிடியிலிருந்து நாம் விடுபட்டு நல்வாழ்வு வாழ முடியும் என்பதை மக்கள் மிகநன்றாக உணர்ந்து வருகின்றனர்.

நமது இந்த முழக்கம், கேரளத்திலும் கேட்கிறது என்பதை யறிய மிகவும் மகிழ்ச்சி யடைகிறோம்.

வடநாட்டு மார்வாரி, குஜராத்தி, மூல்தானிகளின் சுரண்டலைப் புரிந்து கொண்ட கேரளம் இன்று அங்கே 'குஜராத்தியே வெளியேறு, மார்வாரியே வெளியே போ, மூல்தானியே போ, போ,' என்று குரலெழுப்புகிறது.

என்ன இதன் பொருள். திராவிடர்களாகிய நம்மைச் சுரண்டும் கூட்டம் வடநாட்டார்தான் என்பதைப் புரிந்து, அவர்களை வெளியேற்றத் துடிக்கிறார்கள் என்பதுதானே!

கேரளர் இன்று 'ஸ்ரீநாடு' என்ற பெயரில் தனி மாகாணமாகப் பிரிய விரும்புகின்றனர். கன்னடத்

தார் 'பங்காரு நாடு' என்று கேட்கின்றனர். ஆந்திரம் பிரியப் போகிறது.

நமது திட்டப்படி விரைவில், மொழி வழியாக திராவிட மாகாணங்கள் அமையப் போகின்றன.

ஆந்திரம் ஒருபுறம் — ஸ்ரீநாடு என்ற திருநாடு மற்றோர்புறம் — பங்காரு நாடு என்னும் 'பொன்னாடு' பிறிதொரு பக்கம் — இடையே தமிழகம் — இந்த நான்கு மாகாணங்களும் தங்களது இனத்தால், கலையால், கலாச்சாரத்தால் ஒன்றுபட்டு, முக்கிய பிரச்சினைகளில் ஒன்றுபட்டு, வடநாட்டு ஆதிக்கமற்ற திராவிடக் கூட்டாட்சி அமைய வேண்டும் என்பதே நமது குறிக்கோள்.

இத்தகைய திராவிடக் கூட்டாட்சி விரைவில் மலர, நாம் வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து மிக விரைவில் விடுபட்டாக வேண்டும். இதற்கான இறுதிப் போருக்கு நம்மை நாம் தயார் செய்து கொள்ள வேண்டும்.

நமது மக்களை அறியாமையில் ஆழ்த்தும் ஆஸ்திகர்களின் பக்திப் பிரசாரம், மக்களிடையே பரவிக் கிடக்கும் கண்மூடிப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை மிகவும் தீவிரமாக, மக்களிடையே பிரசாரம் செய்து மாற்றி, மக்களிடையே பகுத்தறிவு மணம் கமழும்படி செய்ய வேண்டும்.

நமது பணி மகத்தானது என்று முதலில் குறிப்பிட்டேன். நமக்கு எதிராக வைக்கப்பட்ட வாதங்களைத் தூக்கியெறிந்து விட்டோம், நம்முடைய விளக்கங்கள் மூலம்.

வால்டேர், ரூசோ, மாஜினி, கரிபால்டி போன்றோர்கள் அத்தனை பேரும் ஒன்றுகூடி செய்வதைவிட

அதிகமான அளவு நாம் செய்திருக்கிறோம் — மேலும் செய்தாக வேண்டும்.

நமது இளைஞர் பாசறை இலேசானதல்ல. எதையும் சாதிக்கும் ஆற்றல் படைத்தவர்கள், அறிவுக் களஞ்சியங்கள் — அஞ்சாத நெஞ்சுரம் படைத்த போர் வீரர்கள் என்பதை நாம் நன்றாக உணர்ந்துதான் இருக்கிறோம்.

நமது ஆற்றலைப் பரீட்சை செய்து பார்த்துவிடத்தானோ என்னவோ இன்று ஆச்சாரியார் தமது தீங்கான கல்வித் திட்டத்தை திராவிடர் மீது திணித்திருக்கிறார்! இதுவே அவரது கடைசித் திட்டமாக இருக்கக் கூடும். நாம் அதனைத் தகர்த்தெறியப் போவது நிச்சயம் — நிச்சயம்.

அதேபோல் 'டால்மியாபுரம்' போராட்டத்திலும் நாம் வெற்றிமுரசு கொட்டப் போகிறோம்.

ஒரு காலத்திலே அவர்கள் பலர் — நாம் சிலர். இப்போது நிலைமை தலை கீழாக மாறிவிட்டது. இன்று நாம் பலர் — அவர்கள் சிலர்.

நமக்கிருக்கும் மகத்தான பலத்தைக் கொண்டு நாட்டு மக்களின் கையிலே காலிலே இருக்கும் விலங்குகளை ஒடித்தெறிவோம் அண்ணாவின் தலைமையிலே! திராவிடத்தை திராவிடர்க் காக்குவோம். அந்த முயற்சிக்கு இதுபோன்ற மாநாடுகள், ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டி உறுதுணை செய்வதா யிருக்கின்றன.

என்னைத் தலைமை தாங்கும்படி கேட்டுக்கொண்ட மாவட்டத்தாருக்கு என் நன்றியறிதலை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# சி. பி. சிற்றரசு பேச்சு

தலைவர் அவர்களே! அண்ணா அவர்களே!

மிக முக்கியமான பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டிய கட்டத்தில் இந்த மாநாடு கூடியிருக்கிறது.

ஒரு பக்கத்தில் டால்மியாபுரம் போராட்டம், கருணாநிதி தலைமையில் நடைபெறப் போகிறது. இன்னொரு பக்கத்திலே ஆச்சாரியாரின் படுமோசமான புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தப்போகிறோம்.

புதிய கல்வித் திட்டத்தை நுழைத்த ஆச்சாரியார், இந்நாட்டுப் பெருங்குடி மக்களுக்குக் கேடு பயப்பதான ஒரு திட்டத்தை—மக்கள் எல்லோரும் ஒரு முகமாகக் கண்டிக்கும் போது – தன்னை புத்தர் என்றும், இயேசு என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

நான் கேட்கிறேன், புத்தரும், இயேசுவும் இவரைப் போல, மாதா மாதம் ஆயிரக்கணக்கில் இரட்டைச் சம்பளம் வாங்கிக் கொண்டா, மக்களுக்குப் பாடுபட்டார்கள்! அர்த்தமில்லாமல், வாய் கூசாமல் தைரியத்தோடு தன்னைப் பற்றிக் கூறிக் கொள்கிறாரே!

ஆச்சாரியார் நம்மீது பகிரங்கமாக விஷக்குண்டு வீசத் தொடங்கி விட்டார். குலத் தொழிலைச் செய்து,

நமது மக்கள்—வருங்கால மக்கள் வாழ வேண்டும் என்று மமதையால் மனப்பால் குடிக்கிறார்.

குலத் தொழில் செய்வதாம்? குலத் தொழில் செய்வதால், இன்றைய நிலையில், மரமேறிகளின் மக்களும், நெசவாளிகளின் மக்களும் என்ன செய்வது? அப்பனுக்கே குலத் தொழில் இல்லாமல் பட்டினி கிடக்கும் போது பிள்ளை யெங்கிருந்து குலத்தொழில் செய்ய முடியும்?

எப்படியோ, ஆச்சாரியார் தமது ஆணவப் போக்கினால், திராவிட இனத்திற்கு மகத்தான துரோகச் செயலை வெளிப்படையாகச் செய்து விட்டிருக்கிறார். சனாதன மார்க்கத்திலே மக்கள் திரும்பி விடுவார்கள். அதனால் தமது ஆரிய தர்மமும், ஆரிய குலமும் சுகமாக வாழலாம் என்று பகற்கனவு காண்கிறார்?

அவருடைய பகற் கனவு ஒருக்காலும் பலிக்கப் போவதில்லை. இதனை சும்மா விட்டு விட்டு, ஏமாளிகளாக திராவிடர்கள் வாழ மாட்டார்கள். இந்தத் திட்டத்தை எதிர்த்து ஒழித்தே தீருவோம் என்பது உறுதி.

நாம் ஜனநாயக முறையிலே, முடிவுசெய்து, ஜனநாயக முறையிலேயே போராட்டங்களை ஆரம்பித்து நடத்துகிறோம் சட்டரீதியான முறையில் போகவேண்டுமென்ற எண்ணத்தில் தான், இதுபோன்ற கொடுமைகள் நிகழ்வதை இத்தனை நாளாக சகித்துக்கொண்டு வருகிறோமே தவிர, கையாலாகாத்தனமல்ல என்று எச்சரிக்கிறேன்.

வெள்ளையனிடமிருந்து வாங்கிய சுதந்திரத்தைக் காப்பாற்றத் தெரியாமல், ஆண்டுதோறும் அமெரிக்கரிடம் கோடி கோடியாக கடன்வாங்கி, நாட்டைக் கடனாளியாக ஆக்கும் இந்தக் கையாலாகாத மத்திய அரசாங்கமும் அதற்கு வால்பிடிக்கும் சிலரும் நம்மைக் கேலி செய்கின்றனர். இவர்கள் கேலி நம்மை ஒன்றும் செய்ய முடியாது.

இலங்கையில் வாழ்கின்ற நமது தமிழர்களை டட்லி சேனநாயகா என்னபாடு படுத்துகிறான்? அவனிடம் தட்டிக் கேட்க யோக்கியதை யில்லா இந்த அரசாங்கம் நம்மைக் கேலி செய்து என்ன செய்துவிட முடியும்.

கண்ணீர் சிந்தும் இலங்கைத் தோழர்களின் கஷ்டத்தைப் போக்க முடியாது தவிக்கும் இந்தப் பயங்கொள்ளி சர்க்காரால் நமக்கு என்ன நன்மை விளையும்? ஒன்றும் விளையாது!

எனவே நாம்தான் நமது கோரிக்கைகளை அடையவழி வகுத்து முன்னேற வேண்டும். அதற்கு ஒரே வழி 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதுதான். அதற்கான போராட்டத்திற்கு தயாராகுங்கள்.

வணக்கம்.

# அ. பொன்னம்பலனர் பேச்சு

தலைவர் அவர்களே! அறிஞர் அண்ணா அவர்களே!

திராவிடப் பெருங்குடி மக்களாகிய நாம் சமுதாயத்திலே, பொருளாதாரத்திலே, அரசியலிலே சீரழிந்து—சின்னபின்னப்பட்டுக் கிடக்கிறோம்.

ஆரியர்களின் ஆதிக்கம் ஒரு பக்கம்; வடநாட்டு அரசியல் பிடி மற்றொருபக்கம்; வடநாட்டுப் பணமுதலைகளின் கோரப்பிடி இன்னொரு பக்கம் என்று நாம் பலவித நெருக்கடிகளிலே சிக்கி அவதிப்படுகிறோம்.

சமுதாயத் துறையிலே நாம், திராவிடர்கள் என்று உணர்ந்து ஆரிய ஆதிக்கத்தினின்றும், ஆரியருக்குப் பணிவதினின்றும், அவர்களுக்கு காணிக்கை கொடுப்பதினின்றும், ஆரியக் கடவுள்களைக் கும்பிடுவதினின்றும், ஆரியச் சடங்குகளை அனுசரிப்பதினின்றும் விடுபட்டு, பகுத்தறிவு வாதிகளாய், தன்மானத் திராவிடர்களாய் வாழவேண்டும். அப்போதுதான் நாம் நல்வாழ்வு வாழமுடியும்.

இதற்காக நாம் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறோம்; மேலும் பல போராட்டங்களை நடத்தவேண்டியிருக்கிறது.

நாம் ஜனநாயக முறையிலேயே பணியாற்றி வருகிறோம்; நாம் ஆரம்பிக்கும் போராட்டம் ஜனநாயக முறையிலேயே அமைந்திருக்கும்.

இன்றைய நிலையில் நம் போராட்டத்திற்கு இலக்காகி இருக்கும் ஆச்சாரியார் நமக்குப் புதியவரல்ல; பழையவர்தான்.

1938-ஆம் ஆண்டு இதே ஆச்சாரியார் கொண்டு வந்த இந்தி திட்டத்தை எதிர்த்தோம். அப்போது

நம்மை வேலையற்றவர்கள்,படியாதவர்கள், அறிவிலிகள், சோறு அற்றவர்கள், குழந்தைகளுக்குப் பாலற்றவர்கள் என்றெல்லாம் கேலி செய்தார்; அடக்குமுறைகளை வீசினர்.

ஆனால் வெற்றி பெற்றது நாம்தான்; தோற்றது அவர்தான். இதேபோல்தான் இப்போதைய ஆச்சாரி யாரின் குலதர்மக் கல்வித் திட்டத்தை, மனுதர்மக் கல்வித் திட்டத்தை, மக்களை மாக்களாக ஆக்கும் வர்ணாஸ்ரமக் கல்வித் திட்டத்தை, ஆச்சாரியாரின் ஆரியதர்மக் கல்வித் திட்டத்தை, சுயநலக் கல்வித் திட்டத்தை எதேச்சாதிகாரக் கல்வித் திட்டத்தை எதிர்ப்பதிலும் காணப்போகிறோம்.

இதற்காக அறிஞர் அண்ணாவின் தலைமையிலே கூடி, அவர்தரும் திட்டத்தின்படி, கட்டுப்பாடாக—அமைதியாக - ஒழுங்காக - உறுதியாக, ஊக்கத்துடனும், உணர்ச்சியுடனும், உற்சாகத்துடனும், வீரத்துடனும், தீரத்துடனும், போராடி வெற்றிமாலை சூடுவோம், வாருங்கள் தோழர்களே !

இந்த நாட்டு மக்கள் பசியாலும், பட்டினியாலும், பஞ்சத்தினாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும், நோய் நொடியினாலும், வறுமையினாலும் வாடி, வதங்கி, மெலிந்து, நொந்து செத்துக்கொண்டிருக்கிற நேரத் திலே, டால்மியாபுரங்களும், சவுக்கார் பேட்டைகளும் குபேரப்பட்டினங்களாக விளங்கி, வடநாட்டார், திரா விடரின் உழைப்பை, இரத்தத்தை, பொருளை உறிஞ்சி—சுரண்டிக் கொழுப்பதைப் பார்த்துக்கொண் டிருப் பதா? சகித்துக்கொண் டிருப்பதா? இந்த நிலை மாறி திராவிடர் நல்ல வாழ்வு வாழ வகைதேட வேண்டாமா?

பஞ்சம் மிகுந்த இந்த நாட்டிற்கு விஜயம் செய்யும் வடநாட்டு மந்திரிகள், ஜனாதிபதி ஆகியவர்கள் மக்களைப் பற்றியும், அவர்கள் படுகின்ற தொல்லைகள்-துயரங்கள்-

கஷ்ட நஷ்டங்கள்பற்றி ஒருசிறிதும் கவலைப்படாமல்—சிரத்தை எடுத்துக்கொள்ளாமல், கோவில்களையும், குளங்களையும் சுற்றிவிட்டுப் போகிறார்களே! இது யார் பணத்தால்? நம்முடைய பணத்தால்தானே?

இப்படி இவர்கள் வந்து சுற்றிவிட்டுப் போகும் கோயில்கள், நம் நாட்டுப் பணத்தால் கட்டப்பட்டவை. கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் தரும் மான்யங்களைக் கொண்டவை.

கோயில்களில் குவிந்து கிடக்கும் பணத்தை கல்விக்கு, மருந்துக்கு, கைத்தொழிலுக்கு, விஞ்ஞான வளர்ச்சிக்குச் செலவிடப்படவேண்டும் என்று நாம் சொல்லிவருகிறோம்.

சமீபத்தில் வெளிவந்துள்ள சேதி, நமக்கு மிகவும் வேதனையளிக்கிறது. கோயில் பணம் நாம் கோரி வந்தபடி, நமது மக்களின் முன்னேற்றத்திற்குச் செலவழிக்கப்படாதது மாத்திரமல்ல, அந்தப் பணம் மத்திய அரசாங்கத்தின் கஜானாவில் போய்ச் சேருமாம். இந்த நாட்டின் பெரும் கோயில்கள் மத்திய அரசாங்கத்தின் சொத்து என்று அறிவிக்கப்பட்டுவிட்டது!

இதற்குக் காரணம் என்ன? தென்னாட்டார் கோழைகள், எதையும் எதிர்த்து கேட்கும் திறனற்றவர்கள், அடிமைகள், பாதந்தாங்கிகள் என்ற எண்ணந்தானே? பணம் பெருத்த கோயில்களையும் பிடுங்கிக்கொள்கிறதே மத்திய அரசாங்கம்!

இதற்கெல்லாம் முடிவுகாண, திராவிடநாடு திராவிடர்க்காக நாம் மேலும்மேலும் நமதுசக்தியைத் திரட்டிப் பாடுபடுவோம்.

வணக்கம்.

# என். வி. நடராசன் பேச்சு

தலைவர் அவர்களே! அறிஞர் அண்ணா அவர்களே!

இன்று நாட்டிலே புகுத்தப்பட்டுள்ள ஆச்சாரியா ரின் கல்வித் திட்டத்திற்கு எதிர்ப்பு பெருகி வருகிறது.

அந்த நாளிலே கட்டாய இந்தியை எதிர்த்துப் போராடியபோது, நம்மை ஆதரித்தவர் ஒரு சிலரே! இன்று ஆச்சாரியாரின் கல்வித்திட்டத்தை எதிர்ப்பவர் மிகப் பலர்.

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜர் முதற் கொண்டு, மாஜி மந்திரிகள், சட்டசபை உறுப்பினர் கள், கல்வி நிபுணர்கள் எல்லோரும் ஏகோபித்து எதிர்க் கின்றனர் என்றால், என்ன பொருள்? இக்கல் த் திட் டம் மிகக் கொடுமையான திட்டம் என்பதுதானே?

இதே காங்கிரஸ்காரர்களால் ஒழுக்கசீலர் என்று போற்றப்படும், ஓமந்தூர் இராமசாமி போன்றவர்களே இதைக் கண்டித்தும் கேட்காமல், முதலில் ஒரு தாலுக் காவில் திட்டத்தைப் பரிசீலித்துப் பார்த்த பிறகு அது வெற்றிகரமான தென்ற நிலை ஏற்பட்ட பிறகு வேண்டு மானால் நாடு முழுவதும் கொண்டுவரலாம் என்ற மிக மிகக் குறைந்த பட்ச நியாயமான நிபந்தனைகளையும் ஒப்புக்கொள்ளாமல், எதேச்சாதிகாரமாகக் கல்வித் திட்டத்தைத் திணிக்க முன் வந்துள்ளார்.

ஆச்சாரியாரின் பிரதிபிம்பம் என்று கூறப்படும் டாக்டர் சுப்பராயனின் அறிவுரைகூட அவர் காதில் ஏறவில்லை.

இது போன்ற பிரம்மாண்டமான எதிர்ப்புகள், செல்வாக்கு படைத்தவர்களிடமிருந்து கிளம்பும் நேரத்தில், அவைகளுக்கு மதிப்பு கொடுத்து, பரிசீலனை செய்வதற்குப் பதிலாக எதிர்ப்பவர்கள் எல்லோரும் பித்தலாட்டக்காரர்கள், வேண்டுமென்றே குதர்க்கம் பேசுபவர்கள் என்று வசை பாடுகிறார்! நல்லதா, இது?

நம் போன்றவர்கள் மட்டும் எதிர்த்தால் தேசீயத் தோழர்களின் அகராதிப்படி தேசத் துரோகமாகக் கருதப்படலாம். ஆனால் காமராஜர், சுப்பராயன், மாரிசாமி, கோசல்ராம் M. L. A., ஓமந்தூரார் போன்றவர்கள் எதிப்பதை என்னவென்று சொல்வது?

ஆங்கிலேயனின் அடிவருடிகள் என்று கூறப்பட்ட ஜஸ்டிஸ் காலத்தில்கூட, இதுபோல் எதேச்சாதிகாரமான ஒரு திட்டம்-எல்லோராலும் வெறுக்கப் படும் கொடுமையான திட்டம் புகுத்தப் பட்டதில்லை.

ஒரு திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமானால், அந்த நாளிலே கணிசமான அளவுக்குப் பொது மக்களின் கருத்து அறியப்பட்டது. சட்ட சபை உறுப்பினர்கள் அடங்கிய ஒரு 'செலக்ட் கமிட்டி' என்ற ஒரு குழுவினர் முன் வைக்கப்பட்டு, ஒப்புதல் பெற்ற பின்னரே சட்டமாக்கப்பட்டது.

ஆனால் இன்று கொண்டுவரப்பட்டிருக்கும் கல்வித் திட்டத்தின் சரித்திரம் என்ன? யாரைக் கலந்து இத் திட்டம் உருவாக்கப்பட்டது? எவர் சம்மதத்தின் பேரில், நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது? வெளியாரை, மக்களைக் கலக்காவிடினும் சட்டசபை உறுப்பினர்களையாவது கலந்து இருக்க வேண்டாமா? இல்லையே!

எவரையும் கலக்காது, கேளாது, மக்களேயும், மக்கள் பிரதிநிதிகளேயும் மதியாது, தன் நினைவில் பட்ட ஒன்றே சட்டம் என்றால், ஜனநாயகப் போர்வை எதற்கு?

இதையெல்லாம் நமது தேசியத் தோழர்கள் சிந்திக்கவேண்டும். கொள்கைக்காகவே கட்சியிருக்கவேண்டும். கட்சிக்காகவோ, கட்சியின் தனி மனிதரது விருப்பு வெறுப்புக்காகவோ, கொள்கையல்ல.

கல்வித் திட்டம் காங்கிரஸ் கட்சியின் கொள்கையாக இருக்க முடியாது. ஏனென்றால் அதனை காங்கிரஸ் தலைவர் காமராஜரே எதிர்க்கிறார். எனவே தேசியத் தோழர்களும் இத்திட்டத்தை ஒழித்துக்கட்ட முன் வரவேண்டும்.

கொள்கைக்குத் தனி மனிதர்கள் துரோகம் இழைக்கும் போது கட்சியே—கட்சியின் தனி மனிதரே பெரிதென நினைத்ததால்தான் சுபாஷ் போஸ் போன்ற செயல் வீரர்களை இழந்து விட்டார்கள்.

ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டம் கட்டாய இந்தித் திணிப்பைவிடக் கொடுமையானது. மக்களின் நலனிலே நாட்டங்கொண்ட எல்லாத் தலைவர்களும் எதிர்த்த பிறகும், அத்திட்டத்தைக் கைவிடாமல் இருக்கும் ஆச்சாரியாருக்குச் சரியான பாடங்கற்பிப்போம்.

வணக்கம்.

# தோழர் தங்கப்பழம் பேச்சு

தலைவர் அவர்களே! அறிஞர் அண்ணா அவர்களே!

திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம் நல்ல முறையிலே நாடு முழுதும் பிரசாரம் புரிந்து பெருவாரியான மக்களை நமது இயக்கத்தில் சேர்த்திருக்கிறோம். இயக்கத்தின் ஆதரவாளர்களாகப் பெரும்பாலோர் உள்ளனர்.

இந்த நிலையில், நாம் பல பெரும் போராட்டங்களை நடத்தி வெற்றிமுரசு கொட்ட வேண்டிய பெரும் பொறுப்புமிகுந்தவர்களாக இருக்கிறோம்.

டால்மியாபுரம் போராட்டம், திருத்தணிக்கிளர்ச்சி, கல்வித்திட்ட எதிர்ப்பு ஆகியவற்றில், நமது பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத்தரும் திட்டப்படி — முறைப்படி நடந்து வெற்றி காண வேண்டும்.

இந்த நேரத்திலேதான் நாம் மிகவும் கட்டுப்பாடுடன், கண்ணியத்துடன் கடமை யுணர்ச்சி கொண்டு கழகப் பணியாற்ற வேண்டும்.

உணர்ச்சி வசப்பட்டு ஆர்வம் பொங்கி வழியும் தோழர்கள், கடமையை உணர்ந்து, கட்டுப்பாடான செயல் வீரர்களாகத் திகழ வேண்டுகிறேன்.

வாழ்க திராவிடம்! வணக்கம்.

புரட்சி நடிகர்

# எம். ஜி. இராமச்சந்திரன் பேச்சு

அன்புள்ள அண்ணு அவர்களே, மாநாட்டுத் தலைவர் அவர்களே, தாய்மார்களே, பெரியோர்களே!

இந்த மாநாட்டில் நான் பேசவேண்டும் என்று நண்பர்கள் கேட்டுக் கொண்டார்கள். நன்றி!

நான் எனது கடமையைச் செய்ய வந்திருக்கிறேன். பேசுவது என்னுடைய கடமை. அதைக் கேட்டு, ஆய்ந்து, அலசிப் பார்க்க வேண்டியது உங்களுடைய கடமை.

நாம் எல்லோரும் நமது கடமையை முதலில் நன்ருக உணர்ந்து கொள்ளவேண்டும். இன்றைக்கு உங்கள் மத்தியில் பேச வந்திருக்கிறேன் என்ருல், நான் என் கடமையை உணர்ந்துதான் வந்திருக்கிறேன், நடிகன் என்பதற்காக அல்ல!

நீங்கள் இந்த மாநாட்டில் கூடி இருக்கிறீர்கள் என்ருல், மாநாட்டின் நிகழ்ச்சிகளையும், நடவடிக்கைகளையும் கவனித்து உங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான்! அதை நிறைவேற்ற வேண்டும்.

நீங்கள் என்னை, நான் ஒரு நடிகன் என்பதற்காகவோ, அழகாக இருக்கிறேன் என்பதற்காகவோ, ஆடுகிறேன், பாடுகிறேன் என்பதற்காகவோ மரியாதை காட்டக்கூடாது. நீங்கள் எங்களை வேடிக்கை பார்ப்பதற்காக அல்ல நாங்கள் இங்கே வருவது.

நாம் நமது கடமையைச் சரிவர உணர்ந்து நடந்தால் தான் நமது உரிமையை — நமது பிறப் புரிமை

யான திராவிட நாட்டைப் பெற முடியும் என்பதை மிக வும் நன்ருக உணர்ந்து கட்டுப்பாடாக நடக்கவேண் டும். நமக்குள் பட்டாள ஒழுக்கம் வேண்டும்.

நான் கேட்கிறேன்—இங்கு கூடி யிருக்கும் நாம் அனைவரும் நமது பிறப்புரிமையை—கடமையை நன்கு உணர்ந்திருந்தால் இன்று நம்மை ஒரு ஆச்சாரியார் ஆளுவாரா? அவர்தான் புதிய, குலதர்மக் கல்வித் திட்டத்தை தன்னிச்சையாகக் கொண்டு வருவாரா? அதற்குக் கல்கி போன்றவர்கள் வால் பிடித்து, எதிர்ப் பவர்கள் புட்டாள்கள் என்று கூறுவார்களா? யோசித் துப் பாருங்கள்.

நமக்குள் கட்டுப்பாடும், ஒழுக்கமும், இருந்தால் தான் இத்தகைய நிலையை மாற்றியமைக்க முடியும்.

நாம் திராவிடர்கள். நமது பிறப்புரிமை திராவிடம். இதனை வடவரின் பிடியிலிருந்தும், ஆரிய ஆதிக்கத்தி னின்றும் விடுவிக்க நாம் கடமை வீரர்களாக விளங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் இந்த அளவு பேசவும், எனது பேச்சுரி மையை உணரவும் வந்திருக்கிறேன் என்ருல், அதற்கு அறிஞர் அண்ணுதான் காரணம். கடமை உணர்ந்த அண்ணுதான் நமக்கெல்லாம் கடவுள் போன்றவர்.

கடவுள் என்று கூறுவதைத் தப்பாக எடுத்துக் கொள்ள வேண்டாம். நமது வழிகாட்டி என்றுதான் கூறுகிறேன்.

ஆகையினுல் எல்லோரும் கட்டுப்பாட்டையும், ஒழுக்கத்தையும் கடைப்பிடித்து, அண்ணுவின் தலை மையின் கீழ் ஒன்றுபட்டு திராவிட நாடு பெறுவோம்.

வணக்கம்.

# தோழர் ஈ. வி. கே. சம்பத் பேச்சு

தலைவர் அவர்களே! அறிஞர் அண்ணா அவர்களே!!
தோழர்களே !!!

நேற்றைய தினம் பெண்கள் முன்னேற்ற மாநாடு கூடி மிக்க சிறப்பாக நடந்தேறியிருக்கிறது.

திராவிட சமுதாயம் சீர்திருந்தி முன்னேற சமுதாய சீர்திருத்தம் மிகவும் முக்கியம். சமுதாயத்தில் சரிபங்கு இருக்கும் பெண்கள் கூடி முன்னேற்றத் துறையில் பாடுபட ஆரம்பித்துவிட்டதானது, நாம் வெகு விரைவாக முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறோம் என்பதை உணர்த்துகிறது.

சமுதாய சீர்திருத்தமே அடிப்படைச் சீர்திருத்தமாகும். மற்ற அரசியல், பொருளாதார முன்னேற்றங்களும், சமுதாய சீரமைப்பைப் பொருத்தே அமையும் என்பதை உணரவேண்டும்.

அரசியல் விடுதலைகுறித்து சிந்திப்பதற்குமுன்னால், சமுதாயத்திலுள்ள சீர்கேடுகளைப் பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு நாம் வருகின்ற இந்த இடத்தில்தான், நமது மாற்றாருக்கு—அவர்கள் காங்கிரசார் ஆனாலும், கம்யூனிஸ்ட்—சோஷியலிஸ்ட் ஆகிய எதைச் சேர்ந்தவர்களானாலும் சரி, நாம் "புரியாத புதிராகி" விடுகிறோம். அவர்களால் புரிந்துகொள்ள முடியாத இடமும் இது தான்.

இந்தப் புரியாத — புரிந்துகொள்ள முடியாத நிலைமையைப் பற்றி அவர்கள், "தி. மு. கழகத்தினர்,

கவலையுள்ள—பொறுப்புள்ள அரசியல் வாதிகளல்ல" என்ற வழக்கமான வார்த்தைகளைச் சொல்லுகின்றனர். இந்தக் கேலிக்குரிய வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டுநாம் சலித்துப்போனோம். பொறுப்புள்ள அரசியல் வாதிகளல்ல என்று சொல்லிக்கொள்ளும் நேரத்திலேயே, நமது கழகம் வளர்ந்து—மக்களின் கழகமாக மாறியிருக்கிறது.

நமக்கு, சமுதாய விடுதலையின்றி, அரசியல் பொருளாதார விடுதலை வேண்டும் என்று சொல்வது புதிராக இருக்கிறது.

உலகத்துப் பழைய காலத்து அரசாங்கங்களையும், அவைகள் வளர்ந்து—அழிந்த விவரங்களை எடுத்துப் பார்த்தாலும், நமக்குத் தெரிவதெல்லாம், சமுதாய சீர்திருத்தம், அதில் காணும் ஒற்றுமை ஆகியவைகளின்றி எந்த அரசும் நெடுநாள் புகழ் பரப்பி வாழவில்லை என்பதுதான்.

நாகரிகத்தின் உச்சாணிக் கொம்பில் ஏறிநின்ற கிரேக்க நாட்டிலிருந்து, ஜனநாயகத்தின் தாய் என்று சொல்லப்படும் இங்கிலாந்து வரையில் இருக்கும் அரசியல் அமைப்புகளைப் பார்த்தாலும் இதே நிலைதான் தென்படுகிறது.

பழங்காலத்திலே, ஏதென்சுக்கும், ஸ்பார்ட்டாவுக்கும் நடந்த போரிலே, ஸ்பார்ட்டா மிகப் பெரிய ராணுவபலம் வாய்ந்த நாடாக இருந்தும், ஏதென்ஸ் வெற்றி பெற்றதற்குக் காரணம், ஸ்பார்ட்டாவிலே நிலவிய சமுதாயச் சீர்குலைவும், அதன் காரணமான

ஒற்றுமையின்மையும்தான் என்று நமக்குச் சரித்திரம் போதிக்கிறது.

அதேபோல இங்கிலாந்திலும், மேரிராணி காலத்திலாகட்டும், எலிசபெத், சார்லஸ் ஆகியவர்கள் காலத்திலாகட்டும், சமுதாய அமைப்பைத் தழுவிய சட்டதிட்டங்கள்தான் இருந்திருக்கின்றனவே தவிர, சமுதாய நிலைமைக்கெதிரான அரசியல் நீதி அங்கு இருந்ததில்லை. எனவே, எந்தக் காலத்திலும், மத அடிப்படையைக் கொண்ட சமுதாய அமைப்பும், சமுதாய அடிப்படையைக் கொண்ட அரசியல் அமைப்பும் என்கின்ற இது போன்ற சக்கர வட்டங்களிலேதான், உலக அரசியல் நீதிகள் சுழன்று வந்திருக்கின்றன— வருகின்றன. எனவே, இந்த நாட்டிலும் மத அடிப்படையில் அமைந்த சமுதாய அமைப்பு மாறித் தீருகிற வரையில் மக்களுக்கு அறிவுத் தெளிவு ஏற்படாதென்பதும், அறிவுத் தெளிவு ஏற்படாதவரை மாறி வரும் உலக நிலைக்குத் தகுந்த மாதிரி ஒரு நல்ல அரசியலை வகுத்து நெடுங்காலம் நடத்திச் செல்ல முடியாது என்பதுமான நிலைமை இருந்து வருகிறதென்பதை, தி. மு. கழகம் மிக நன்றாக உணர்ந்திருக்கிறது.

இந்நாட்டிலுள்ள சிக்கலை ஆறாயிரம், ஏழாயிரம் மைல்களுக்கப்பாலிருந்துவரும் புத்தகத்தைப் படித்து, நெட்டுரு செய்வதின் மூலமாகத் திருத்திவிடமுடியாது— அதில் நமக்கு நம்பிக்கையும் இல்லை.

எந்த நாளிலும், ஏற்றத் தாழ்வுள்ள சமுதாய அமைப்பை வைத்துக்கொண்டு சிறந்து விளங்க முடியாது.

சமுதாயம் பற்றிய நமக்கிருக்கும் இந்த அசைக்க முடியாத நம்பிக்கையின் காரணமாகத்தான், நமது லட்சியப் பயணம் கொஞ்சம் மெல்ல அடிபோடுகிறது என்பதும் நமக்குத் தெரியும் என்றாலும், 'திடீர் வளர்ச்சியை' நாம்விரும்பாமலே பணியாற்றி வருகிறோம்.

இன்றைக்கும், திராவிடத்தின் பல பகுதிகளிலே வதியும் செல்வாக்கு படைத்தவர்கள், நமது அரசியல் கொள்கையை ஒப்புக் கொள்கின்றனர். வடநாட்டான் பிடி தளர்ந்து — அவன் சுரண்டல் முறை ஒழிந்து தென்னாடு தனியாக விளங்குவதற்குத்தான் அவர்கள் உதவி செய்யத் தயாராயிருக்கிறார்கள். ஆனால், நமது சமுதாயக் கொள்கை அவர்களுக்குக் கசப்பாகத் தெரிகிறது. உண்மையிலேயே நாம் 'திடீர் வளர்ச்சி'யை விரும்பினால், சந்தாத் தொகை நிறைய வேண்டும் என்று நினைத்தால், உறுப்பினர்களின் எண்ணிக்கையை கோடி கோடியாகக் காட்ட ஆசைப்பட்டால், தி. மு. கழகத்தின் சமுதாயக் கொள்கை சற்று தளர்ந்தால் போதும். இந்தத் தென்னாட்டிலே, வேறு கட்சிகள் பற்றிய விலாசம் விசாரிக்கும் அளவுக்கு வளர்ந்துவிட முடியும்.

ஆனால், நாம் எதிர்பார்ப்பது, சந்தாத் தொகையின் கூட்டல் கழித்தலல்ல. உறுப்பினர்களின் பிரம்மாண்டமான எண்ணிக்கையுமல்ல. நமது கழகத்தில் ஒருவன் சேருகிறானென்றால், அவன் எதற்கும் தயாரான ஒரு போர்வீரன் என்று பொருள். எதையும் தாங்கும் இதயம் படைத்தவன் என்று அர்த்தம். நாம் கோரும் திராவிட நாட்டுப் பிரச்சினையை ஒருவன் புரிந்து கொள்கிறானென்றால், முதலில், மதத்தின் மூட

நம்பிக்கை—பார்ப்பனப்புரட்டு ஆகியவைகளி லிருந்து விடுபட்டவன் என்று பொருள்.

இது போன்ற நிலைமைகளை வைத்து, நம்மைப் பார்ப்பனத் துவேஷிகள் என்றும், வகுப்பு வாதிகள் என்றும் சிலர் சொல்கின்றனர். அத்தகைய தோழர்களுக்கும் ஒன்றைத் தெளிவு படுத்தியாக வேண்டும்.

காந்தியார், கோட்சே என்ற பார்ப்பனனல் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கேட்டபோது, இங்கு எங்காவது பார்ப்பனத் துவேஷம் தலைவிரித்தாடிற்று? நாம் செய்யும் பார்ப்பனியத்திற் கெதிரான பிரசாரம் தீங்கு விளைவித்ததா? ஆனால், நாம் கால் வைக்காத இடத்திலே, நமது பிரசாரம் கேட்காத இடத்திலே, மராத்தியிலே, பலப் பல பார்ப்பனர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இதற்குக் காரணம் என்ன வென்பதை நம்மைத் தூற்றும் தோழர்கள் சிந்திக்க வேண்டும். நாம் பிரசாரம் செய்து, இடித்துக் காட்டுவதெல்லாம், ஒரு குறிப்பிட்ட தத்துவத்தையே தவிர, மனிதர்களையல்ல. யாரையும் கொன்று குவிப்பதும் அல்ல நமது பிரசாரத்தின் நோக்கம்.

சமுதாயச் சீர்திருத்தம் என்பது, நிலத்தை உழுது பண்படுத்துவது போன்றது. அரசியல் விடுதலை என்பது, பண்பட்ட நிலத்தில் தனக்குச் சொந்தமாக பயிரிடுவது போன்றது. பொதுவுடைமை என்பது, அதன் விளைச்சலைப் போன்றது. பொதுவாக, அரசியல், பொருளாதாரம் எல்லாவற்றிற்கும் அடித்தளம் போன்றது சமூகச் சீர்திருத்தம்.

எனவேதான், நாங்கள் சமூக சீர்திருத்தத்துடன் கூடிய அரசியல் விடுதலையையே விரும்புகிறோம். அதற்காகவே பாடுபடுகிறோம்.

சமுதாய சீர்திருத்தம்பற்றி நாம் வெகுவாகப் பாடு பட்டுவரும் இந்த நேரத்திலே, ஆட்சியின் உச்சாணிக் கொம்பிலே ஆடம்பரமாக வீற்றுப் பவனிவரும் ஆச்சாரியார், தமது அதிகார போதையைத் துணையாகக் கொண்டு தமது சொந்த மனோபாவப்படி எதேச்சாதிகாரமாகத் திராவிட மக்களின் மீது ஒரு புதிய வெடி குண்டைத் தூக்கி வீசி யெறிந்திருக்கிறார்.

ஆம், ஆச்சாரியார் இப்போது புகுத்தியுள்ள புதிய ஆரம்பக் கல்வித் திட்டம், திராவிட மக்களின் மீது — வருங்கால — திராவிட சந்ததிகளின் மீது தொடுத் துள்ள பயங்கரப் போராட்டமாகும்.

ஆச்சாரியார், இத் திட்டத்தைப் புகுத்துவதினால், தமது ஆரிய குலம் ஆனந்தமாக வாழ வழி வகுத்து விட்டதாக நினைக்கலாம் — அது தவறு.

அவரது இந்த அக்கிரமத் திட்டம் புகுத்தப்படுவதால் நமக்குத்தான் சாதகமான சூழ்நிலை ஏற்படுகிறதே தவிற — ஆச்சாரியாருக்கல்ல.

இத்திட்டம் புகுத்தப் படுவதால், ஆரிய தர்மத்தின் தீங்கான கொள்கைகளைக் கண்டித்து, எடுத்து விளக்கி மக்களை ஆரிய தர்மத்தின் பிடியிலிருந்து விடுவிக்க நமக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

ஆச்சாரியார், அவரவர் தத்தமது குலத்தொழிலைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மூன்று

மணி நேரக் கல்வித் திட்டத்தைப் புகுத்தியுள்ளதாகக் கூறுகிருர்.

இது அவருடைய நெடுநாளைய எண்ணம் — திட்டம். இதனை ஆச்சாரியார் ஓராண்டுக்கு முன்னரே சென்னை, சைதாப்பேட்டையில் நடந்த சலவைத் தொழிலாளர் மாநாட்டிலே கூறி யிருக்கிருர்.

சலவைத் தொழிலாளர்கள் தமது மாநாட்டின் நிகழ்ச்சிகள் அடங்கிய அச்சடித்த வரவேற்புத் தாளை, பெரிய மனிதர்களுக் கெல்லாம் அனுப்புவது போன்று, ஆச்சாரியாருக்கும், முதன் மந்திரி என்பதால் தபால் மூலம் அனுப்பினராம்.

எதிர்பாராத விதமாக, ஆச்சாரியாரின் காரியதரிசி யிடமிருந்து, முதன் மந்திரியார் மாநாட்டில் கலந்து கொள்ளுகிருர் என்ற செய்தி கிடைத்தது.

சலவைத் தொழிலாளரும் முதன் மந்திரியார் வரு வது கேட்டு பூரித்து அவரை வரவேற்ருர்கள்.

அந்த மாநாட்டிற்கு, சலவைத் தொழிலாளர் சமூ கத்தைச் சேர்ந்த ஒருவர், படித்தவர்—சட்டசபை மேல் சபையிலே அங்கம் (M. L. C.) வகிப்பவர் தலைமை தாங் கினார்.

சலவைத் தொழிலாளர் மாநாட்டிற்கு வந்த ஆச் சாரியார் முதன் முதலில் சலவைத் தொழிலாளர் மாநாடு என்ற பெயரால் மாநாடு கூட்டி யிருப்பதே தவறு — கடவுளுக்கு விரோதம் என்று குறிப்பிட்டார்.

அதாவது 'வண்ணார்' என்ற சமூகத்தார், சமுதா யத்திலே தங்களுக்கு ஏற்பட்டுள்ள இழிவைச் சகியா

மல் தங்களது தொழிலைக் குறிப்பிடும் சொல்லான சல வைத் தொழிலாளர், என்று தங்களை அழைத்துக்கொள் வது கடவுளுக்கு விரோதம் என்று ஆச்சாரியார் அறி வுரை வழங்கினர்.

இரண்டாவதாக, மாநாட்டுத் தலைமை வகிப்பவர், படித்து, சட்டசபை உறுப்பினராக இருப்பதால், அவ ரிடம் அதிக மதிப்பு வைக்க மாட்டேன், ஆனல் குலத் தொழிலை விடாது செய்துவரும் அவர்களைத்தான் அதிக மாக மதிப்பேன் என்று கூறினர்.

மூன்ருவதாக, நீங்கள் உங்கள் பிள்ளைகளைப்படிக்க வைத்து, பட்டம், பதவி, உத்தியோகம் செய்ய அனுப்ப வேண்டாம். உங்கள் குலத் தொழிலையே செய்யப் பழக்குங்கள் அதுதான் நல்லது. கடவுள் வகுத்த வழி என்று உபதேசித்தார்.

இவைகளை யெல்லாம் கூறவேண்டு மென்றுதான், நான் நீங்கள் அழைக்காமலே வந்து கலந்து கொண் டேன் என்றும் கூறினர் ஆச்சாரியார் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

ஆச்சாரியார், பிற குலத்தார் தங்களது குலத் தொழிலைவிட்டு, படித்து முன்னேறுவதைப் பொறுக்க வில்லை யென்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டுமென்று கேட்கிறேன்.

சமுதாயத்திலே சில சமூகங்கள், தொழில் காரண மாகக் கேவலமாக நினைக்கப்படுகின்றன என்பதை உணர்ந்து, சீர்திருந்தி முன்னேறி வரும் காலத்திலே, ஆச்சாரியார் குலதர்மம் ஓங்க வேண்டும், குலத் தொழி

லைச் செய்ய வேண்டும் என்று பேசுவது — உபதேசிப்பது — அதிகார பூர்வமான சட்டம் செய்வது என்பது மிகவும் பிற்போக்கான சுயநல மல்லவா என்று ஏன் கேட்கக்கூடாது?

தொன்று தொட்டு ஆரியம் திராவிடத்தின் நல்ல பண்பாடு, கலை, கலாச்சாரம் ஆகியவற்றின் மீது தொடுத்துவந்த போராட்டத்தின் தொடர்ச்சியிலே, இந்த ஆரம்பக் கல்வித் திட்டமும் ஒரு கட்டம் என்பதை நாம் நன்றாக உணர்ந்தாக வேண்டும்.

தலைமுறை தலைமுறையாக ஆரியம் திராவிடத்தின் மீது தொடுத்து வந்த யுத்த தந்திரத்தின் புதியமுறை— உருவம் இந்த புதிய கல்வித் திட்டமாகும்.

சமுதாயத்தில் உள்ள பேதா பேதங்களைப் போக்கப் பாடுபடும் நாம், இந்தக் கல்வித் திட்டத்தை யெப்படி அனுமதிக்க முடியும்? எதிர்த்து ஒழித்தே தீருவோம்.

அடுத்தபடியாக தோழர் கருணாநிதி தலைமையில் டால்மியாபுரம் போராட்டம் தொடங்கப் போகிறது. திருத்தணிக் கிளர்ச்சியும் நடைபெற்று வருகிறது.

எனவே தோழர்களே, நாம் கட்டுப்பாட்டுடனும், கண்ணியத்துடனும், அமைதிக் குறைவின்றி அறிஞர் அண்ணா தீட்டித்தரும் திட்டப்படி போர்க்களத்தில் குதித்து செயல் வீரர்களாகத் திகழ்வோமாக!

வணக்கம்.

# தோழர் இரா. நெடுஞ்செழியன் பேச்சு

தலைவர் அவர்களே! தோழர்களே!

திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம் மக்களிடையே நல்ல செல்வாக்கு பெற்று, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறோம்.

நாம் நாளுக்குநாள் வளர்கிறோம்—மேலும் மேலும் வளர்ந்து வருகிறோம். நம்முடைய வளர்ந்துவரும் சக்தியைக் கண்டு மாற்றார் மருள்கின்றனர்.

நம்முடைய வளர்ச்சி, நம்முடைய கொள்கைகளின் காரணமாக, கண்ணியம், கட்டுப்பாடு, கருத்துவளம், எடுத்து விளக்கும் முறை ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டது என்பதை நன்றாக அறிவோம்.

வளர்ந்து நமது இயக்கத்தை — இயக்கத்தின் மாபெரும் சக்தியைக கண்டு மாற்றுக்கட்சியினர் மனம் புழுங்கி எரிச்சல் கொள்கின்றனர்; துடிதுடித்து, எந்த வழியிலே நம்மை மிதித்துத் துவைத்து நசுக்குவது என்பதிலே தமது கண்களையும், கருத்தையும் செலவிட்டு வருகின்றனர்.

இன்று காலையிலே இங்கு நடந்த நமது மாபெரும் ஊர்வலத்தைக் கண்டு மனம் பொறாத காங்கிரஸ்காரர் நடந்துகொண்ட முறை என்ன என்பதை எண்ணும் போது, மாற்றார் தமது குறிக்கோளை—நம்மை அடக்கி யொழித்திடவேண்டும் என்ற எண்ணத்தை நிறை

வேற்றிக்கொள்ள எத்தகைய குறுக்கு வழிகளையும், நாகரிகமற்ற செயல்களையும் செய்யத் தயங்கமாட்டார் கள் என்பது தெள்ளத் தெளிய விளங்குகிறது.

நாம் காலையில் கட்டுப்பாடான முறையில் நமது மிகப்பெரிய ஊர்வலத்தை நடத்தி வந்தோம். அதைக் கண்டு மனம் புழுங்கின காங்கிரசே நீ செய்தது என்ன?

எங்களுடைய ஊர்வலம் அமைதியாக, அழகாக போய்க்கொண்டிருக்கிற நேரத்திலே, நீ ஊர்வலத்தின் குறுக்கே ஒரு காங்கிரஸ் தொண்டனை, மூவர்ணக் கொடி ஏந்திக்கொண்டு செல்லவிடுகிறாய்? ஏன்? எதற்காக?

மூவர்ணக் கொடியேந்தி, ஊர்வலத்தின் குறுக்கே செல்லும் தோழனை, ஆர்வமிக்க மக்கள் தடுத்து நிறுத்தி, அதனால் கலகம் விளையட்டும்—அமைதி குலையட்டும்—அதைக்காட்டி எங்களுடைய மாநாட்டைக் கலைக்கலாம்; குழப்பத்துடன் நடந்தது என்று உன்னுடைய அடிவருடிப் பத்திரிகைகளிலே பெரிதாகப் போட்டு வெளி உலகை ஏமாற்றலாம் என்ற கேவல புத்தியைத் தானே காட்டுகிறது?

ஒழுங்கான முறையிலே, கண்ணியமாக மேடைகளிலே எங்களுடைய கொள்கைகளைக் கண்டித்துப் பேச வக்கற்று, வழி—வகையற்று இத்தகைய தவறான போக்கினைக் கடைப்பிடிப்பது உன்னுடைய கட்சிக்கு, கண்ணியத்திற்கு—அதைவிட நீ வானமளாவப் பேசுகின்ற அகிம்சைக்கு—ஜனநாயகப் பண்பிற்கு மிகவும் கேவலம் என்பதையாவது எண்ணிப் பார்த்து திருந்த வேண்டும்.

கருத்துக்குக் கருத்து — எழுத்துக்கு எழுத்து— பேச்சுக்குப் பேச்சு—கொள்கைக்கு கொள்கை என்ற முறையிலேயே உன்னுடைய கருத்துக்களை, எழுத்துக்களை, பேச்சுக்களை கொள்கைகளை மக்கள் முன்னே வை.

மக்கள் அதனை ஆய்ந்து, அலசிப்பார்த்துத் தீர்ப்பளிக்கட்டும். அதைவிட்டு, பிறருடைய ஊர்வலங்களில் குறுக்கே கொடியேந்திச் சென்று குழப்பமுண்டாக்க முற்படுவது காலத்திற்கேற்றதல்ல, கண்ணியமல்ல—காட்டுமிராண்டித்தனம் என்பதாகத்தானே மக்கள் மன்றம் கருதும் என்று கேட்கிறேன்.

'ஆரியமாயை' தவறு என்றால், 'ஆரிய மகிமை' எழுதிக் காட்டேன். 'இராவண காவியம்' வேண்டாமென்றால், 'இராமர் மகிமையைக்' கூறிக்களியேன். அப்படிச் செய்யாமல் அதிகார வெறிகொண்டு, புத்தகங்களுக்குத் தடை விதிப்பதும், ஊர்வலங்களைக் கலைப்பதும், குண்டர்கள் துணைகொண்டு கூட்டங்களைக் கலைப்பதும் எத்தனை நாளைக்குச் செல்லும்? யோசித்து ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டுகிறேன்.

இந்த நாட்டைப் பசி, பிணி, பட்டினி ஆகியவற்றிலிருந்து காப்பாற்ற உன்னால் — உன்னுடைய கட்சி அரசாங்கத்தினால் முடியவில்லை.

இதற்குக் காரணம் வடவரின் பிடி, வடநாட்டு அரசியல், பொருளாதார ஆதிக்கம் என்பதை எடுத்துக் காட்டினால் எங்களைக் கேலி பேசுகிறாய்?

'திராவிடநாடு' கிடையாது என்றும், ஆந்திரர் முதலியோர் சேரமாட்டார்கள் என்றும் கிண்டல் செய்கிறாய்.

நாங்கள் என்ன சொல்லுகிறோம், சொல்லி வருகிறோம் 'திராவிடநாடு' பற்றிய விளக்கம் தரும்போது என்பதை நீ சரியாகக் கவனித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

" ஆந்திரம், கன்னடம், தமிழகம், மலையாளம் இந்த நான்கும் ஒன்றுபட்டு, மொழி, கலாச்சாரம், வர்த்தகம், பொருளாதாரம் ஆகியவைகளில் ஒன்றுபட்டு திராவிட சுதந்திர சமதர்ம சோஷியலிசக் குடியரசு நாடாக விளங்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு வருகிறோம்.

சிலருக்கு இது இன்னும் புரியவில்லை. கல்லாதவருக்கு கற்றவரின் சொல், வேம்பாகக் கசப்பது போல, நமது சொல் அவர்களுக்குக் கசப்பாகத் தோன்றுகிறது.

ஆந்திரன், கன்னடியன், மலையாளி ஆகியவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையே என்றகுதர்க்க வாதம் பேசி, தங்கள் கூற்றுக்கு சமாதானம் தேடிக்கொள்கின்றனர்.

நாங்கள் கேட்கிறோம் — தென்னாட்டின் நான்கு இனமும் ஏன் ஒன்றாகச் சேர முடியாது. தமிழனும் —மலையாளியும், மலையாளியும்—ஆந்திரனும், ஆந்திரனும்—கன்னடியனும் ஒருங்கே அமர்ந்திருந்தால் பேதம் பிரித்துப் பார்க்க முடியாது; அடையாளம் காண முடியாது. மொழியிலும் அப்படியே—சிறு மாற்றங்களைத் தவிர!

ஆனால், ஒரு தமிழனையும் குஜராத்தியையும் பேச விட்டுப் பார்த்தால் பிறப்பில், மொழியில், கலாச்சாரத்தில் எதிலுமே இருக்கும் பேதம் தெளிவாகத் தெரியும்.

தென்னாட்டின் 4 இனங்களுக்கும் இருக்கும் பேதாபேதம், மாடப் புறாவுக்கும், மணிப் புறாவுக்கும் இருக்கும் பேதம் போன்றதாகும். ஆனால் வடவனுக்கும் நமக்கும் இருக்கும் பேதா பேதம், மாடப் புறாவுக்கும், வல்லூறுகளுக்கும் இருக்கும் பேதம் போன்றதாகும். எனவே, தென்னாட்டின் நான்கு இனங்களும் ஒன்றுபடுவது பெரிதல்ல.

இந்த நாட்டிலே, எந்தப் பிரச்னையையும் அகிலஉலக கண்ணோட்டத்திலேயே பார்க்கும் தோழர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் நம்மை எதிர்க்க நேரும்போது, சொல்லும் சமாதானம், தென்னாடு பிரியுமானால், மிகவும் சிறியதாகப் போய்விடு மென்கின்றனர்.

அத்துடன், நாம் சொல்லும் திராவிட இனம் இப்போது இல்லையென்றும், அது எப்போதோ, 4 பிரிவுகளாகப் பிரிந்துவிட்டதென்றும் சொல்கின்றனர்.

ஆனால் அவர்கள் நம்மைவிட சிறியதான நாடுகள் சம்பந்தப்பட்டப் பிரச்னையை ஆதரிக்கத் தவறுவதில்லை.

நாம் கேட்கும் திராவிடத்தைவிடச் சிறியதான, ஜெர்மனி நாட்டை 4 துண்டுகளாகப் போட்டு, அதில் ஒரு துண்டை—நாட்டின் மிகச் சிறு பகுதியை ஆட்சி செய்யும் இதே கம்யூனிஸ்டு தோழர்கள்தான், நம்மை சிறிய நாடு கேட்பவர்கள் என்று சொல்கின்றனர்.

ஜெர்மனியைத் துண்டாடியது மட்டுமல்ல, நாம் எடுத்துக்காட்டுவதுபோல், தனித்தனி பண்புகள் கொண்ட மக்களாக இல்லலாமல், ஒரே மொழி பேசி, ஒரே மதக்காரர்களாக இருக்கும் ஜெர்மானியர்களை,—

போரில் தோற்றவர்கள் என்ற ஒரே காரணங்காட்டி, 4 துண்டுகளாகத் துண்டித்து விட்டது மட்டுமல்லாமல், அந்த நாட்டின் தலைநகராயிருந்த பெர்லின் நகரத்தையும் நான்கு கூறுகளாக ஆக்கி ஆட்சி நடத்தும், இதே தோழர்கள்தான், நம்மை சிறு நாடு கேட்பவர்கள் என்று கேலி பேசுகிறார்கள்.

கேலி பேசுவோர் பேசிக் கொண்டிருக்கட்டும்; அதுபற்றி நமக்குக் கவலையில்லை. 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையை இன்றைய நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் நிச்சயம் வளர்ந்திருக்கிறோம்.

நம்மை மாற்றாகக் கருதிய தோழர்களே நம்மை —நம் கருத்தை மதித்து ஒப்புக்கொள்கிறார்கள்; அரசியல், சமுதாய, பொருளாதாரத் துறைகளில் வஞ்சிக்கப்பட்டு வருவதை எவ்வொருவரும் உணரத் தொடங்கி விட்டார்கள்; இன்றைய அரசியலின் அலங்கோலத்தையும் சரியாகப் புரிந்து கொள்ளத் தலைப்பட்டு விட்டார்கள்; நாடு படிப்படியாக அந்நிய சக்திகளுக்கு அடகு வைக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

அமெரிக்க ஆப்பிள்பி, இந்திய அரசியல் சரியாக இயங்குகிறதா என்று பார்க்க வரும், மானக்கேடான விஷயம் வேறெந்த நாட்டிலாவது நடக்குமா? நமது அரசியல் நிலையைக் கண்காணிக்க அமெரிக்கன் வருவது, பெருந்தவறு என்பது ஒரு புறமிருந்தாலும், அந்த ஆப்பிள்பி ஆராய்ந்து சொல்லியிருக்கும் இந்திய அரசியல் நிலை, இன்றைய ஆட்சியாளர் வெட்கித் தலை

குனியுமளவுக்கு பொருள் கொண்டதாக இருப்பதை, அவர்கள் எண்ணிப் பார்த்ததாகக் காணோம்.

“இப்போதுள்ள நிலைமையில், அகில இந்திய ரீதியில், காங்கிரசுடன் போட்டியிடக் கூடிய பலம் வாய்ந்த எதிர்க்கட்சிகள் இல்லையென்றாலும், மாகாணங்களின் நிலை கொஞ்சம் கொஞ்சமாக மடிகிறது. மத்திய ஆட்சிக்கெதிரான கசப்பு வளருகிறது. நாளாக ஆக, மாகாணங்கள், மத்திய ஆட்சியிலிருந்து வெட்டிக் கொள்ளவே வேலை செய்து வருகின்றன” என்று அந்த அமெரிக்கர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த யூகம் முற்றிலும் சரியே. இன்று, நேருவுக்குப் பின்னால், அகில இந்திய ரீதியில் உத்தரவு பிறப்பிக்க யாராலும் முடியாது. சீசருக்குப் பின்னால், ரோமக் குடியரசுக்குட்பட்டிருந்த 35 ராஜ்யங்களும் எப்படித் துண்டித்துக் கொண்டு போனதோ; அது போல, இந்தியாவும் மாகாண சுயாட்சிகளாக மாறிவிடக் கூடும்.

எனவே, நாம் நமது வெற்றிப் பாதையை நோக்கிப் பயணம் செய்கிறோம். நாம் விரும்பிக் கோரும் திராவிட சமதர்மக் கூட்டாட்சி வந்துதான் தீரும். பிரிந்துபோகும் ஆந்திரமும், டெல்லி உறவைவிட, தமிழர் உறவே நல்லது என்று விரைவில் தெரிந்துகொள்ளும்.

நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். அதற்கான முயற்சியில் எல்லோரும் ஈடுபடுவோம். இந்த மாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களும் அதற்கு வழி காட்டியாக இருக்கும்.

வணக்கம்.

# தீர்மானங்கள்

(1) மறைந்த மாவீரர்களும் லட்சியவாதிகளுமான ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனார், எம். எஸ். பி. செந்திக்குமாரனார், சாமி கைவல்யம், அறிஞர் ஆர். கே. சண்முகம், பெ. சி. சிதம்பரனார் ருஷ்ய நாட்டுத் தலைவரும் உலகப் பாட்டாளி மக்களின் தலைவருமான ஸ்டாலின் ஆகியோரின் மறைவுக்கு இம்மாநாடு வருந்துவதுடன் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. —தலைவர்

o o o

(2) வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு அடிமைபட்டு வரும் நம் நாட்டிலே, தொழில் துறைகளை யெல்லாம் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து, பொருளாதார வேட்டை யாடுவதில் தலை சிறந்துள்ள சேத் ராம கிருஷ்ண டால்மியா, திருச்சிக் கருகிலுள்ள கல்லக்குடி என்னும் சிற்றூரில் வளப்பமுள்ள மண்ணை பயன் படுத்தி வாணிபம் நடத்துவதோடு மட்டுமல்லாமல், நம் சமுதாயத்தின் தன்மானத்தையே சீர்குலையச் செய்து வருவதற்கு அடையாளமாக டால்மியாபுரம் என்று பெயர் பொறிக்கப்பட்டிருப்பதை உடனடியாக மாற்ற வேண்டு மென்பதற்காக, தி. மு. கழக மத்தியக் குழுவும் பொதுச் செயலாளரும் வகுத்துள்ள திட்டத்தையும் போராட்ட முறையையும் இம்மாநாடு மகிழ்ச்சியுடன் வரவேற்பதுடன் அப்போராட்டம் வெற்றி யடைவதற்கான நடவடிக்கைகளில் இராமநாதபுர மாவட்ட தி. மு. கழகம் தனது சக்தியைத் தரத் தயாராயிருக்கிற தென்

பதை இம் மாநாட்டின் மூலம் தெரிவித்துக் கொள்கிறது.

—தூத்துக்குடி எஸ். நடராசன்,
மதுரை எம். ஆர். கணேசன்.

o o o

(3) சென்னை முதலமைச்சர் தோழர் ராசகோபாலாச்சாரியார் அவர்களால் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் புதிய கல்வித் திட்டமானது, திராவிட சமுதாயத்தின் எஞ்சியுள்ள வாழ்வையும், எதிர்கால நல்வாழ்வையும் சிதைவுறச் செய்வதாக யிருப்பதாலும், ஜனநாயக முறைக்கு நேர் விரோதமாக இத்திட்டம் புகுத்தப்பட்டிருப்பதாலும், எல்லாக் கட்சிகளிலுமுள்ள முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள், கல்வி நிபுணர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகிய அனைவராலும் எதிர்த்த பிறகும், முதலமைச்சர், இத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் அநீதியை வன்மையாகக் கண்டிப்பதுடன் உடனடியாக அத்திட்டத்தை வாபஸ் பெறுமாறு நினைவூட்டுகிறது

o o o

3. (அ) ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தைக் கண்டித்து, அதை வாபஸ் பெறுமாறு செய்வதற்கான ஜனநாயக முறையுடன் கூடிய எதிர்ப்புத் திட்டத்தை இம்மாதம் 21-ந் தேதி நாடெங்கும் நடைபெறச் செய்ததோடு, ஜூலை 8-ந் தேதி நாடெங்கும் ஊர்வலங்கள் நடத்தி, நமது கழக ஆதரவுபெற்ற சட்டசபை உறுப்பினர்களிடம் கல்வித் திட்ட தீமையை எடுத்துக் கூறும் படியான எதிர்ப்புத் திட்டத்தை இம் மாநாடு பூரிப்புடன் வரவேற்கிறது.

3. (ஆ) ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தை எதிர்க்கும் போராட்டத்தில் இராமநாதபுர மாவட்ட தி. மு. கழகமும், தோழர்களும் கலந்து பணியாற்றத் தயாராயுள்ளனர் என்பதை இம்மாநாட்டின் மூலம் தெரிவித்துக்கொள்கிறது.

—அருண்மொழி, முகவை சவுந்திரபாண்டியன்.

o o o

(4) திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையான செல்வமாகியதும், பொதுவாக திராவிட சமுதாயத்தின் கேடயம் போன்றதுமான கழகத்தின் இதழ் "நம் நாடு," அதன் பணியை இன்னும் விரிவாகச் செய்வதற்கு இராமநாதபுர மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிளைக் கழகமும், சந்தாதாரராகச் சேர்ந்துதவ வேண்டுமென்று இம்மாநாடு இராமநாதபுர மாவட்டத்திலுள்ள தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகளைக் கேட்டுக் கொள்கிறது.

—ஈரோடு எஸ் அப்பாவு. அபிராமம்—சத்தியவாசன்

o o o

(5) காங்கிரஸ் ஆட்சியிலே அளவுக்கு மீறிய கொடுமைகளுக்கு ஆளாகிவரும் கைத்தறி நெசவாளர்களின் பரிதாப நிலையைப் பற்றிக் கவலைப்படாத டெல்லி ஆட்சியாளரின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், திராவிட சமுதாயத்தைச் சார்ந்த கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் துயரம் ஓரளவாவது தீர்க்கப்படுவதற்காக திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், அனுதாபிகளும் கைத்தறித் துணிகளையே ஆதரிக்குமாறு இம்மாநாடு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறது.

—கே எஸ். ராசமான். தூத்துக்குடி, எம். ரத்தினம்.

(6) ஐந்தாண்டு திட்டம் என்ற பேரால் டெல்லி ஆட்சிப் பீடத்தார், தென்னாட்டு மக்களின் வரிப் பணத்தைக் கொண்டு, வடநாடு மேலும் வளமுடன் வாழவும், தென்னாடு, தொழிலபிவிருத்தி, இன்னும் பிற வசதிகளிழந்து தாழ வைக்கவுமான ஓர் சதித் திட்டம் என்பதை எடுத்துக் காட்டுவதுடன், டெல்லி அரசியலாரின் இவ்வோர வஞ்சனையை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

—சத்தியவாணி முத்து. எஸ். ஏ. ராசமாணிக்கம்.

o o o

(7) சித்தூர் — திருத்தணி தமிழகத்தில் சேர வேண்டுமென்று அப்பகுதி மக்களால் நடைபெற்று வரும் அறப்போரை இம்மாநாடு ஆதரிப்பதுடன், இப் போராட்டத்தில் கலந்து பணியாற்றி வரும் தி. மு. கழகத் தோழர்களை மிகவும் பாராட்டுகிறது.

—நடிகமணி டி. வி. நாராயணசாமி, (சென்னை)
தா. ஆவடையப்பன், (சேரிழவந்தான்)

o o o

(8) கைத்தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு தருவதாகக் கூறிக் கொள்ளும் அரசியலார், கைத்தொழில் மூலமாக தயாரிக்கப்படும் தீப்பெட்டித் தொழிலுக்கும், அதன் வளர்ச்சிக்குமான எல்லா உதவிகளையும், குறிப்பாக இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகள் தாராளமாகக் கிடைக்கும்படி அரசியலார் உடனடியாகச் செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்வதுடன், பொதுமக்களும் இத்தொழில் வளர்ச்சி யடையும் வகையில் பேராதரவு தருமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறது.

—பூங்கோதை. அலிஷேக் மன்சூர்

# தோழர் வி. வி. இராமசாமி அவர்கள்

## ஓர் இரவு நாடக விழாத் தலைமை யுரை

தோழர்களே !

இந்த நாடக விழாவுக்கு என்னைத் தலைமை தாங்கும்படி சொன்ன நண்பர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

இரண்டுநாள் மாநாடுகளையும் கண்டு களித்தேன்.

மாநாடுகளிலே நாடகங்களை நடத்திக் காட்டுவது, சீர்திருத்தக் கருத்துக்களை, மறு மலர்ச்சி எண்ணங்களை மக்களுக்குச் சுவைபட எடுத்துக்கூறும் முறையேயாகும்.

இந்தத் துறை இன்று மிகவும் முன்னேறி இருக்கிறது. புராண நாடகங்கண்டு புளித்துப்போன மனதுக்கு, புதுப்புது கருத்துக்களைத் தரும் நாடகங்கள் மிகவும் நன்மை பயக்கின்றன.

சினிமாவில் ஒருதடவை பேசப்பட்ட பேச்சேதான் எப்போதும் கேட்கவேண்டி வரும். நாடகத்திலேயோ, ஒவ்வொருநாளும் புதுப்புது கருத்துரைகளைப் பேசலாம், அன்றாட அரசியல் நடவடிக்கைகளைச் சித்தரித்துக் காட்டலாம். புதிய புதிய காட்சிகளை அமைத்துக் காட்டலாம். எனவேதான் பொதுமக்கள் இப்போது நாடகங்களை விரும்பிக் கூடிக் காண்கிறார்கள்.

பொது மக்களுக்கு அறிவுப் பிரச்சாரம் புரிய, ஒவ்வொரு முக்கியமான நகரங்களிலும், திறந்த வெளி நாடக அரங்கங்கள் அமைக்கப் படவேண்டும்

நாடகத் துறையில் பணிபுரியும் K. R. இராமசாமி அவர்களையும், அவரது குழுவினரையும் பாராட்டுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சினிமா, நாடகத் துறையினைப் பயன் படுத்துவதை ஒரு சிலர் குறை கூறுகின்றனர். அவர்கள் ஆராய்ந்து பார்த்தால், தி. மு. க. இந்த இரண்டு துறைகளும், வைதிகத்துக்கு, பழமைக்கு, பார்ப்பனீயத்திற்குப் பயன்பட்டு வந்ததை மாற்றி இருப்பதும், மக்களுக்குப் புதுமைக் கருத்து ஏற்பட இத்துறைகளைப் பயன் படுத்துவதும் விளங்கும். இது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

மற்றும், திராவிட முன்னேற்றக் கழகம், பணம் படைத்தோர்களிடம் சென்று பணம் திரட்டி, கட்சிக் காரியத்தைச் செய்துவரவில்லை. பணக்காரர்களிடம் ஐயாயிரம், பத்தாயிரம் என்று பணம் வாங்கினால், கொள்கையை எப்படிக் காப்பாற்ற முடியும்!

தி. மு. க. தோழர்கள், கழக வளர்ச்சிக்கு ஓயாது உழைக்கிறார்கள்—நாடகத் துறையிலும் உழைத்துப் பணம் திரட்டி, திரட்டிய பணத்தைப் பொது மக்களின் நல்லறிவுப் பிரச்சாரத்துக்கே பயன் படுத்துகிறார்கள்.

பணக்காரரிடம் பணம் பெற்று கட்சி நடத்துவது கேவலம்—எனவே தி. மு. க. கையாளும் முறை கண்ணியமானது. இதனால், தி. மு. க. நல்ல வளர்ச்சியடைகிறது. வளர்ச்சிக்கு உறுதுணையாக நாடகப் பணி அமைகிறது.

வணக்கம்.

TINNELVELI

ஸ்ரீ மகள் அச்சகம், சென்னை-1